


31ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 31 | பாலம்: 13 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | July 01, 2021

# கனடாவின் சரித்திரத்தில் கறைபடிந்த பக்கம்!

கனடாவின் முதற் குடி மக்களின் பிரதிநிதி 2021 யூன் 24ஆம் திகதி சஸ்கச்சுவான் மாகாணத்தில் ஒரு முன்னாள் குடியிருப்புப் பள்ளிக்கூடத்தில் (Residential School) அடையாளம் குறிக்கப்படாத 751 கல்லறைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

சஸ்கச்சுவான் மாகாணத்தின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள முன்னாள் மேரிவல் இந்தியன் குடியிருப்புப் பள்ளிக்கூடத்தின் (Merieval Indian Residential School) மைதானத்திற்கு அருகே இந்தக் கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக கோவெஸ்ஸஸ் (Cowessess) முதற் குடி மக்களின் தலைவர் Cadmus Delorme ஊடகங்களுக்குத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் பழங்குடி மக்களின் மூத்தோரும் மற்றும் குடியிருப்புப் பள்ளிக்கூடங்களில் இருந்து தப்பி வெளியே வந்தோரும் காலம் காலமாகக் கூறி வந்த கதைகளை இக்கண்டுபிடிப்பு உறுதிப்படுத்தி உள்ளது என்றார்.

இக்கண்டுபிடிப்பு கனடாவில் கடந்த ஒரு மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது நிகழ்வாகும். 2021 மே 27ஆம் திகதி பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள முன்னாள் கம்லூப்ஸ் இந்தியன் குடியிருப்புப் பள்ளிக்கூடத்தைச் சூழவுள்ள பகுதியில் (Kamloops Indian Residential School) அடையாளம் குறிப்பிடப்படாத 215 சிறுவர்களின் புதைகுழிகள் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. இதை கம்லூப்ஸ் இல் உள்ள ரிகேஎம்லப்ஸ் ரெ செக்குயோபிஎம்ஸி (TK'emlups te Secwepemc) முதற்குடிமக்களின் தலைவர் Rosanne Casimir ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்திருந்தார். அவர் அந்த அறிக்கையில் இங்கு புதைக்கப்பட்டவர்களில் மூன்று வயதுக் குழந்தையும் அடங்கும் என்றார். Rosanne Casimir, CBC ஊடகத்திற்கு வழங்கிய பேட்டியில் முதற் குடி மக்கள் இந்தச் செய்திகளைக் கேட்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர். தற்போது தங்களுக்குத் தரப்பட்ட அறிக்கை முதற்கட்ட விவரங்களை மட்டுமே கொண்டுள்ளது. தங்களுக்கு விரைவில் ஒரு விபரமான அறிக்கை தரப்படும் என இந்த ஆய்வுகளை நடத்தும் நிறுவனத்தை மேற்பார்வை செய்யும் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாண அரசின் “மொழி மற்றும் கலாசாரத் துறை” தெரிவித்துள்ளது என்றார்.

கம்லூப்ஸ் இந்தியன் குடியிருப்புப் பள்ளிக்கூடம் 1890ஆம் ஆண்டிலிருந்து 1969ஆம் ஆண்டுவரை கத்தோலிக்கத் தேவாலயத்தின் பராமரிப்பில் நடைபெற்று வந்தது. அதன் பின்னர் கனடிய மத்திய அரசு அப்பள்ளிக் கூடத்தைப் பொறுப்பேற்று அதை 1978இல் மூடும்வரை ஒரு நாள் குடியிருப்புப் பள்ளிக்கூடமாக (Residence for Day School) நடத்தி வந்தது.



இதேபோல் சஸ்கச்சுவானின் இந்தியன் குடியிருப்புப் பள்ளிக்கூடமும் 1890ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு கத்தோலிக்க சமய நிறுவனத்தால் (Catholic missionaries) நடத்தப்பட்டு வந்தது. கனடிய மத்தியரசு பள்ளிக்கூடத்துக்கான நிதி வசதிகளை 1901ஆம் ஆண்டில் இருந்து வழங்கி வந்தது. பின்னர் அந்தப் பள்ளிக்கூடத்தை நிர்வகிக்கும் பொறுப்பு கோவெஸ்ஸஸ் முதற் குடிமக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 1987இல் அப்பள்ளிக்கூடம் மூடப்பட்டு 1990இல் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது.

ஏறக்குறைய 150,000 முதற்குடி மக்களின் குழந்தைகள் கனடிய அரசாங்கத்தால் நிதி அளிக்கப்பட்டு கிறிஸ்த்தவ மதத் தேவாலயத்தால் நடத்தப்பட்ட இந்தக் குடியிருப்புப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்பட்டனர். இப்பள்ளிக்கூடங்கள் கனடிய மத்திய அரசால் 1990களின் பிற்பகுதியில் மூடப்படும்வரை இயங்கி வந்தன.



கனடா தின வாழ்த்து

பல முதற்குடி மக்களின் குழந்தைகள் அவர்களது குடும்பங்களில் இருந்து வலுக்கட்டாயமாகப் பிரிக்கப்பட்டு இந்தக் குடியிருப்புப் பள்ளிக்கூடங்களில் சேர்க்கப்பட்டனர். கனடாவின் குடியிருப்புப் பள்ளிக்கூடங்களில் நடைபெற்றவற்றைப் பற்றி ஆராயவென மத்திய அரசால் 2008ஆம் ஆண்டு யூன் 01ஆம் திகதி அமைக்கப்பட்ட “கனடாவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு” (Canada's Truth and Reconciliation Commission) 2015ஆம் ஆண்டில் வெளியிட்ட தனது அறிக்கையில் பல மாணவர்கள் இந்தக் குடியிருப்புப் பள்ளிக்கூடங்களில் உடல் ரீதியாகவும், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறியிருந்தது. இப்பள்ளிக்கூடங்கள் முதற்குடி மக்களின் குழந்தைகள் அவர்களின் மரபைப் பின்பற்றவும் மற்றும் அவர்களின் மொழிகளைப் பேசவும் தடை விதித்திருந்தன. இந்தக் குடியிருப்புப் பள்ளிக்கூடங்கள் முதற்குடிமக்களின் குழந்தைகளைக் கவனியாமல் புறக்கணிப்பிற்கு ஆளாக்கி ஒரு கலாசார இனப் படுகொலையை (Cultural genocide) திட்டமிட்டு நடத்தியது எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேரிவல் இந்தியன் குடியிருப்புப் பள்ளிக்கூடத்தில் 1960ஆம் ஆண்டிலிருந்து 1970ஆம்ஆண்டுவரை படித்த மாணவி Ronalee Lavallee கனடாவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு வழங்கிய சாட்சியத்தில் இந்தக் குடியிருப்புப்

தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)














Yes! WE'RE OPEN
GTA SQUARE MALL
Middlefield & Finch
5215 Finch Ave. E., Toronto ON, M1S 0C2







RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
1286 Kennedy Rd Scarborough Ont M1P 2L5
Thas Thirunavukkarasu Dip-in- Eng(Hons)
Broker ABR, SRS
416.388.4333
thasremax@gmail.com www.soldbythas.com
Markham / Kingston
$449,000
Stacked Townhse - 3BR + 2WR
Mccowan / Steels
$515,000
Condo Apt. - 3BR + 2WR
Markham & Sheppard
$545,000
Condo Apt - 2BR + 2WR
Eglinton Ave/Markham Rd
$649,000
Townhouse. - 4BR + 3WR
Bellamy / Eglinton
$779,900
Detached - 4BR + 2WR
Birchmount & Danforth
$869,000
2-Storey Detached - 4BR + 3WR
9th Line / Hoover Park
$899,999
2-Storey Detached - 4BR + 3WR
582 Danforth rd - Toronto
$34,000
Retail/ office /food



Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்
Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்
1.0% முதல் 1.5% வரை
அதிரடி சிறப்பு வட்டி வீதம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்
நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்
அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!
105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861

# கௌதம புத்தர் போதனை நிகழ்த்திய புனித தலம் – சாரநாத்



செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715

புத்த சமயத்தினரின் முக்கியமான நான்கு புனித தலங்களில் ஒன்றான வரலாற்றுப் புகழ் மிக்க சாரநாத், காசியில் இருந்து 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. ஆகவே காசிக்குச் செல்லும் பக்தர்கள் சாரநாத் சென்று வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். பழங்காலத்தில் இங்கு



சௌகந்தி தூபி

மிகப்பெரிய பௌத்த ஆலயங்கள் இருந்திருக்கின்றன. அந்த ஆலயங்கள் பகைவர்களின் தாக்குதல் காரணமாக அழிந்து அவற்றின் இடிபாடுகள் மட்டுமே தற்சமயம் காண முடிகின்றது. இருப்பினும் சில மடாலையங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் மட்டும் புதுப்பிக்கப்பட்டு அதன் பழமை மாறாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவை யாதெனில்:-

சௌகந்தி தூபி - கௌதம புத்தர் புத்தகயா என்னும் இடத்தில் ஞானம் அடைந்த பின்னர், தர்மத்தைப் பற்றிய முதல் சொற்பொழிவை தனது சீடர்களுக்கு சாரநாத்தில் பிரசங்கம் செய்துள்ளார். இந்த நிகழ்ச்சியை நினைவு கூரும் வகையில் 5ஆம் நூற்றாண்டில் குப்தர்களின் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்டதுதான் இந்தத் தூபி. இப்பிரபலமான தூபிக்கு அருகில் மியான்மர், ஜப்பான், திபெத் மற்றும் பர்மா நாட்டினர்களால் கட்டப்பட்டுப் பராமரிக்கப்படும் பல புத்த ஆலயங்கள் உள்ளன.



புத்தர் சிலை - மான் பூங்கா சாரநாத்

தர்ம சக்கர தூபி : புத்தர் தர்ம உரையாடலை நிகழ்த்திய இடத்தில் 44 மீற்றர் உயரம் மற்றும் 28 மீற்றர் விட்டம் கொண்ட உருளை வடிவத்தில் செங்கல்களைக் கொண்டு பேரரசர் அசோகரால் நிறுவப்பட்ட நினைவு சின்னம் உள்ளது. இங்குள்ள பழைய செங்கல் துகள்கள் மற்றும் மணல்களைப் புனிதமாகக் கருதி புத்த சமய மக்கள் எடுத்து செல்கின்றனர்.

தொல்பொருள் அருங்காட்சியகம் - சாரநாத்தில் பழங்காலத்து கட்டிடங்களின் இடிபாடுகளில் இருந்து கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் பார்வைக்காகப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், பேரரசர் அசோகர் சாரநாத்க்கு வருகை தந்ததின் அடையாளமாக உருவாக்கப்பட்ட நான்கு சிங்கங்களின் தலைகளுடன் கூடிய 40 அடி உயரம் கொண்ட அசோகா கல் தூண் உடைந்த நிலையில் கண்டுபிடிக்



அசோகா கல் தூண் - இந்தியாவின் தேசிய சின்னம்

கப்பட்டது அவையும் இங்கு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இக்கல்தூணில் உள்ள சிங்கத்தின் உருவம்தான் இந்தியாவின் தேசிய சின்னமாகவும் மற்றும் அரசின் முத்திரையாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

தாய் ஆலயம் - தாய்லாந் நாட்டின் புத்த மதத்தைச் சார்ந்த பிரமுகர்களினால் 1933 ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்த ஆலயம் மிகவும் பசுமையான பூங்காவின் நடுவே தாய் கட்டிடக்கலை பாணியில் கட்டப்பட்டுள்ளது. இந்தியா-தாய்லாந்து நாட்டின் கூட்டு முயற்சியினால் 14 ஆண்டுகளில் (1997-2011) உருவாக்கப் பட்ட பிரமாண்டமான 80 அடி உயரமான நிற்கும் நிலையில் உள்ள புத்தர் சிலை காண்போரை பிரமிக்க வைக்கின்றது.

முலகந்தகுட்டி விஹாரா புத்த கோயில் - 1931ஆம் ஆண்டு இலங்கை மகாபோதி சங்கத்தால் கட்டப்பட்ட இந்த ஆலயத்தின் சுவர்களில் புத்தரின் வாழ்க்கையை சித்தரிக்கும் அழகிய ஓவியங்கள் உள்ளன. இலங்கையின் அனுராதபுரத்தில் உள்ள ஸ்ரீ மகா போதி மரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட கிளையின் மூலம் வளர்ந்த போதி மரம் இங்கு மிகவும் புனிதமாகக் கருதி வழிபடப்படுகின்றது.

சாரநாத்தை சுற்றிப்பார்பதற்கு ஒருநாள் போதுமானது. காசியில் இருந்து சிறியரக சொகுசு வாகனங்கள் வாடகைக்குக் கிடைக்கும். இங்குள்ள புத்த ஆலயங்கள் அனைத்து நாட்களிலும் சூரியன் உதயம் முதல் மறையும் வரை திறந்து இருக்கும் மற்றும் நுழைவுக் கட்டணம் எதுவும் இல்லை. புத்தர் ஞானம் பெற்ற புத்தகயா பற்றிய விவரங்களை அடுத்த இதழில் காணலாம்.



# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை




பௌத்த மதம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட நாள் பொசன் தினமாக இலங்கையில் கொண்டாடப்படுகின்றது. வருடந்தோறும் யூன் 24ஆம் திகதி கொண்டாடப்படும் இத்தினத்தில் கைதிகள் சிலருக்கு மன்னிப்பு வழங்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். சிறு குற்றங்களுக்காக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளுக்கே இவ்வாறு மன்னிப்பு வழங்கப்படும்.

ஆனால், இவ்வருடத்தின் பொசன் தினமான கடந்த 24ஆம் திகதி ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் 93 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இக் கைதிகளில் 16 பேர் தமிழ் அரசியல் கைதிகள். ஏனையோர் 77 சிறு குற்றங்களுடன் தொடர்புடைய கைதிகள்.

தமிழ் அரசியல் கைதிகள் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறித்த கைதிகளின் குடும்பத்தினரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளதுடன் தமிழ் மக்களும் இதனை வரவேற்றுள்ளனர். தமிழ் அரசியல் கைதிகள் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டமைக்கு அரசியல் உள்நோக்கமுள்ளதாக சிலர் விமர்சித்தாலும் நீண்ட காலம் சிறையில் வாடியவர்கள் தங்கள் குடும்பங்களுடன் இணைந்து கொண்டதில் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அக் குடும்பங்களும் இந்த விடுதலைக்கான பின்னணிகள், அரசியல் நோக்கங்கள் குறித்தெல்லாம் தேடிப் பார்க்காமல் மகிழ்ச்சியை மட்டுமே வெளிப்படுத்துகின்றனர்.

விடுதலைப்புலிகளுடன் தொடர்புபட்டவர்களாக அல்லது விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இவர்களில் 17, 14 வருடங்கள் சிறைகளில் கழித்தவர்களும் உள்ளனர். இவர்களில் பலர் தங்கள் சிறைத் தண்டனையை நிறைவு செய்து விரைவில் விடுதலையாகவிருந்தவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டமைக்கு தமிழ் தேசிய அரசியல்வாதிகள் சிலரும் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துள்ளனர். நீண்ட காலமாக சிறைகளில் இருந்த அரசியல் கைதிகளில் ஒரு தொகுதியினர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சியான விடயம் என வட மாகாண சபையின் முன்னாள் அமைச்சரான அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.



மிகுதியாக உள்ள அரசியல் கைதிகளும் எந்தவித பாரபட்சமும் இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். தமிழ் அரசியல் கைதிகள் 16 பேர் விடுவிக்கப்பட்டமைக்கு அரசிற்கும் ஜனாதிபதிக்கும் நன்றியினை கூறிக் கொள்வதாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். நீண்ட காலமாக அரசாங்கத்திடம் முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக பல வருடங்களாக சிறையில் இருந்த தமிழ் அரசியல் கைதிகள் சிலர் விடுதலை செய்யப்பட்டுள்ள விடயம் மகிழ்ச்சியை தந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ‘நல்லாட்சி’ அரசாங்கத்தில் கூட அரசியல் கைதிகளின் விடுதலைக்கான முயற்சிகள் இடம்பெறவில்லை. அந்த வகையிலே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவிற்கு நன்றி தெரிவிப்பதாக அவர் கூறியுள்ளார்.

வேறு சில தமிழ் அரசியல்வாதிகளும் தாங்கள் மகிழ்ச்சியடைவதாகக் கூறினாலும் இந்த விடுதலையின் பின்னால் உள்ள அரசியலையும் விமர்சித்து வருகின்றனர். குறிப்பாக தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் “அரசியல் கைதிகள் 16 பேரின் விடுதலை என்பது இந்த அரசின் மரண தண்டனைக் கைதியொருவரை விடுதலை செய்யும் வகையில் முலாம் பூசப்பட்ட விடயமாகும்” எனத் தெரிவித்துள்ளார்.

சில தமிழ் தேசிய அரசியல்வாதிகள் மௌனம் காப்பதையும் அவதானிக்க முடிகின்றது. ஏனெனில், இப்போது இக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டமைக்கு தமிழ் தேசிய அரசியல்வாதிகள் காரணமல்ல. அவர்கள் சமீப காலத்தில் தமிழ் கைதிகள் விடுதலை குறித்து எவ்வித போராட்டங்களையும் நடத்தவில்லை. அத்துடன் அரசாங்கத்திற்கு பாரிய அழுத்தம் எதனையும் அண்மைய நாட்களில் அவர்கள் கொடுக்கவில்லை. இந்தக் கைதிகள் விடுதலையாவதற்கு முன்பான நாட்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா, சிறீலங்கா சுதந்திர கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர, அமைச்சர் நாமல் ராஜபக்ஸ ஆகியோர் நீண்ட காலமாக சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்கின்ற கருத்தை நாடாளுமன்றில் உரையாற்றும் போது வெளிப்படுத்தினர். இவர்களில் அமைச்சர் நாமல் ராஜபக்ஸ கடந்த 22ஆம் திகதி நாடாளுமன்றில் உரையாற்றுகையில் தெரிவித்த கருத்து வித்தியாசமானதாக அமைந்திருந்தது.

பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, எவ்விதமான வழக்கு விசாரணைகளுமின்றி, நீண்ட காலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை, புனர்வாழ்விற்கு உட்படுத்தி விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் சபையில் கோரிக்கை விடுத்தார்.

“கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது, நான் உள்ளிட்ட தற்போது அமைச்சர்களாக உள்ள பலர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தோம். இதன்போது சிறைச்சாலைகளின் நிலைமைகளை நன்கு தெரிந்து கொண்டேன். எனக்கு எனது அப்பா கற்றுக்கொடுத்ததை விட கடந்த அரசாங்கம் அதிகமானவற்றை கற்றுக்கொடுத்தது.

விடுதலைப்புலிகளின் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் பலர் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் எனது வயதைவிட அதிகளவான காலம் சிறைச்சாலையில் இருக்கின்றனர். இதில் 35 பேர் வழக்கு விசாரணைகளில் ஏதுமின்றி தண்டனை அனுபவித்து வருகின்றனர். இந்த 35 பேரில் அதிகளவானோர், தங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைக் காலத்தை விட அதிகளவான காலம் சிறைச்சாலைகளில் இருக்கின்றனர். சந்தேக நபர்களை தடுப்புக் காவலில் வைத்துக்கொண்டு, 20 வருடங்களுக்கு மேலாக வழக்குகள் விசாரிக்கப்படுகின்றன. இவர்களுக்கு மத்தியில் 13 பேர் எந்த விதமான வழக்குகளும் தாக்கல் செய்யப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாத 116 பேர் சிறைச்சாலைகளில் இருக்கின்றனர். இவர்கள் பல வருடங்களாக தடுப்புக் காவலில் உள்ளனர். இவர்களுக்கு எதிரான வழக்குகள் விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படல் வேண்டும். இல்லை என்றால் இவர்களுக்கு எதிராகக் குற்றப் பத்திரிகைத் தாக்கல் செய்ய வேண்டும். பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 12 ஆயிரத்துக்கும் அதிகமானோர் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள இவர்களுக்குப் பிணை வழங்க முடியாத நிலை காணப்படுகிறது. எனவே, இவர்களைப் புனர்வாழ்வுக்குட்படுத்தி விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று அவர் தெரிவித்தார்.

அமைச்சர் நாமல் ராஜபக்ஸவின் உரையை அடுத்து உரையாற்றிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர். கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாமல் ராஜபக்ஸவின் உரையை வரவேற்பதாகக் கூறிவிட்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடர் ஆரம்பமாகும் போதும், ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை கேள்விக்கு உட்படுத்தப்படும் போதும் மாத்திரம், பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பிலோ அல்லது அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பிலோ அரசாங்கம் பேசக்கூடாது எனக் குறிப்பிட்டார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றும்போது, “அரசியல் கைதிகள் பற்றி, கடந்த 11 வருடங்களாகப் பேசிக் கொண்டிருக்கின்றோம். எங்களுடைய அழுத்தங்களால், 100 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம் என தொடர்ந்துக் கூறிகொண்டிருக்காது முடிந்தால் அவர்களை விரைவில் விடுதலை செய்து காட்டுங்கள்” என அமைச்சர் நாமல் ராஜபக்ஸவிற்கு அவர் பகிரங்கமாக சவால் விடுத்தார். இவ்வாறானதொரு சூழ்நிலையில்தான் கடந்த 24ஆம் திகதி பொசன் தினத்தன்று 16 தமிழ் அரசி யல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

தொடர்ந்து, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பாரத லக்ஸ்மன் பிரேமச் சந்திரவை சுட்டுப் படுகொலை செய்த வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த கைதியான துமிந்த சில்வாவிற்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியுள்ளமை கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது.

மரணதண்டனை கைதியான துமிந்த சில்வாவின் விடுதலையையொட்டி, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

விளம்பரம்
VLAMBARAM
31ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# MORTGAGE

MORTGAGE IN ANY SITUATION

- நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)
- லைன் ஒப் கிரெடிட் (HELOC)
- Private 1st Mortgage (No Income Verification)
- ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்
- 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்
வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது



Cell : 416-624- 4843
416-613-2788 / 416-816-9011

ஜெ(Jey)இராசதுரை
MBA. BBA (Hon) AMP
Team Leader / Mortgage & Real Estate Broker

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# இடர்கால இணையவழிக் கல்வியில் உள்ள சிக்கல்கள்

- விகிர்தன் -

இலங்கையில் கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக பாதிப்பிற்குள்ளாகியுள்ள துறைகளில் கல்வியும் முக்கியமானதாகும். தற்போது பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதும் தளர்த்தப்படுவதுமாக உள்ள நிலையில் அரச அலுவலகங்கள், தனியார் துறைகள் என்பன இடைக்கிடையில் இயங்குவதும், தடைப்படுவதுமாக உள்ளன. ஆனால், பாடசாலைகள் தொடர்ந்து மூடப்பட்ட நிலையிலேயே உள்ளன. பாடசாலைகள் மீண்டும் எப்போது ஆரம்பமாகும் என்பதற்கான உறுதிப்பாடுகள் இல்லை. கல்வி அமைச்சும் இது பற்றி தீர்மானம் எடுக்க முடியாத நிலையில் இருப்பதாக அறிவித்துள்ளது.

பாடசாலைகள் இவ்வாறு தொடர்ந்து மூடப்பட்டுள்ள நிலையில் இணையவழிக் கல்வி நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதன்மூலம் மாணவர்கள் எந்தளவிற்கு பயன்பெறுகின்றனர் என்பது விமர்சனத்திற்கு உரியதாகவே உள்ளது.

ஆனால், இந்த இணையவழிக் கல்வி நடைமுறையினால் மாணவர்கள் மன அழுத்தங்களுக்கு உள்ளாகி வருகின்றமையினை அறிய முடிகின்றது. மாணவர்கள் மட்டுமன்றி, பெற்றோரும் மன அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர்.

பாடசாலைகள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளதால் மாணவர்களின் கல்விக்கான மாற்று வழிமுறையொன்றை மேற்கொள்வது அவசியமானதுதான். இந்த வழிமுறையை ஒழுங்கமைப்பதன் பொறுப்பு கல்வி அமைச்சுக்கே உள்ளது. ஆனால், கல்வி அமைச்சினால் பாடசாலைகளுக்கு எவ்வித வழிகாட்டல்களும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

அந்தந்த பிரதேசங்களில் உள்ள வலயக் கல்விப் பணிமனைகள் பாடசாலைகளுக்கு அறிவுறுத்தல்களை மட்டும் வழங்கி உள்ளன. அதாவது, இணைவழியில் பாடங்களை மாணவர்களுக்கு வழங்குமாறும் Zoom தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கற்பிக்குமாறும் பொதுவான அறிவுறுத்தலே வழங்கப்பட்டுள்ளது.

Zoomஇல் கற்பிப்பதை விடவும் பாடங்களை வைபர் ஊடாக மாணவர்களுக்கு அனுப்புகின்ற நடவடிக்கையே பல பிரதேசங்களில் உள்ள பாடசாலை ஆசிரியர்கள் மேற்கொண்டு வருகின்றனர். அளவு கணக்கின்றி, காலை முதல் மாலை வரை தொடர்ந்து இவ்வாறு பாடங்கள் அச்சு வடிவத் தாள்களின் மிருது நகல்களாக (Soft copy) அனுப்படுகின்றன.

அவற்றை மாணவர்கள் முழுவதுமாக கற்கவோ கிரகித்துக்கொள்ளவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றை அனுப்பும் ஆசிரியர்களும் மாணவர்கள் இவற்றை எவ்வாறு உள்வாங்கப் போகின்றனர் என்று எண்ணிப்பார்ப்பதாகத் தெரியவில்லை.

இது தொடர்பில் பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் பலரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர்களில் பலர் இதில் உள்ள சிக்கல்களை ஏற்றுக்கொள்கின்றனர். ஆசிரியர்கள் தாங்கள் இணையவழியில் அனுப்பும் பாடங்கள் குறித்து படிவங்களில் நாளாந்தம் பதிவு செய்து பாடசாலை அதிபர்களிடம் கையளிக்க வேண்டியுள்ளது. அந்தப் படிவங்கள் வலயக் கல்வி பணிமனைகளுக்கு அனுப்பப்படுகின்றன.



கோரோனா காலத்தில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தாலும், தாங்கள் கற்பித்தல் நடவடிக்கைகளை வீடுகளிலிருந்தே மேற்கொண்டு வருவதாகக் காண்பிக்கப்படும் பதிவுகளாகவே இந்த நடவடிக்கை அமைந்துள்ளதாகவும், இது சரியானதல்ல எனவும் ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். இந்த இணையவழிக் கல்வி நாட்டில் எத்தனை மாணவர்களுக்கு சென்றடைகின்றது என்பதும் கேள்விக்குரியதே. ஏனெனில், நகரப் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு உள்ள வசதிகள் கிராமப்புறங்களில் உள்ள மாணவர்களிடம் இல்லை. அவர்களிடம் கணினி வசதிகள் இல்லை. இணையத்தைப் பயன்படுத்தும் கைத்தொலைபேசிகளும் இல்லாத குடும்பங்கள் உள்ளன. அவ்வாறான கைத்தொலைபேசி சில வீடுகளில் இருந்தாலும் ஒரு வீட்டிலுள்ள பிள்ளைகள் அனைவரும் ஒரு கைத்தொலைபேசியை பயன்படுத்தி கற்றலில் ஈடுபட முடியாது.

இணையத்தைப் பயன்படுத்தவதற்கான Data card வாங்குவதற்கும் வசதிகள் இல்லாதோர் உள்ளனர். இணையத்தைப் பயன்படுத்துவதற்கு முடியாத (coverage இல்லாத பிரதேசங்கள்) பிரதேசங்களும் உள்ளன.

இந்த நிலையில் இணையவழிக் கல்வி எந்தளவிற்கு அனைத்து மாணவர்களையும் சென்றடையும்? பாடசாலைகள் தொடர்ச்சியாக மூடப்படுகின்ற ஓர் இடர் கால நிலையில் ஒரு மாற்று ஒழுங்காக இணைவழிக் கல்வியை மேற்கொள்வது தவிர்க்க முடியாத ஒரு நடைமுறை என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். எனினும், அது தொடர்பான ஆய்வு ஒன்றை மேற்கொண்டு அனைத்து பிரதேச மாணவர்களும் பயன்பெறும் வகையில் பொறிமுறையொன்று வடிவமைக்கப்படல் அவசியமானது.

இதனை கல்வி அமைச்சே மேற்கொள்ள வேண்டும். கொரோனா தொற்று தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு பரிந்துரைகளை வழங்குவதற்கு நிபுணர் குழுக்கள் சுகாதார அமைச்சின் கீழ் அமைக்கப்பட்டிருப்பதைப் போல, கல்வித்துறையிலும் அவ்வாறு நிபுணர்கள் குழு அமைக்கப்பட்டு பரிந்துரைகளை வழங்க வேண்டும். அவ்வாறான குழுக்கள் எவையும் கல்வி அமைச்சின் கீழ் உள்ளதாகத் தெரியவில்லை.

கல்வி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், இணையவழி கல்வி நடவடிக்கைகளால் மாணவர்கள் மட்டுமன்றி, ஆசிரியர்கள், பெற்றோர் அனைவருமே மன அழுத்தங்களுக்கு ஆளாகி வருவதான முறைப்பாடுகள் அமைச்சுக்கு கிடைக்கப் பெறுவதாகவும், பாடசாலை அதிபர்கள் மற்றும், உப அதிபர்கள் இதற்கான ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். இதிலிருந்து கல்வி அமைச்சின் வழிகாட்டல்கள் இது தொடர்பில் இல்லை என்பது புலப்படுகின்றது.

பல நாடுகளில் உயர்கல்வித்துறையில் இணையவழியான கற்பித்தல் நடைபெறுவதை அறிந்திருக்கின்றோம். கொரோனா பரவலுக்கு முன்பாகவே இந்த நடைமுறை உள்ளது. அதற்கான முறையான ஒழுங்குபடுத்தல்கள் அந்தந்த நாடுகளின் கல்வித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு அவை நேரத்தியாக நடைபெறுகின்றன. இலங்கை போன்ற நாடுகளில் ஓர் இடர்கால நடைமுறையாகவே இது உள்ளதால், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. பல ஆசிரியர்கள் இணையவழி தொழில்நுட்பம் பற்றி தெரியாதவர்களாகவும் உள்ளனர். மாணவர்களின் நிலை எவ்வாறிருக்கும்?

கொரோனா பரவலின் பாதிப்பு ஒரு தொடர்கதையாகவே நீள்கின்றது. இந்நிலையில் சவால்களை ஏற்றுக்கொண்டு, பாதுகாப்பையும் கவனத்தில் கொண்டு, அதனூடே வாழ்வதற்கான நடைமுறைகளையும் வகுக்க வேண்டும். இது மேல் இடத்தின் கவனத்திலிருந்து வரவேண்டும். இடர் காலத்திற்கான மாற்று நடவடிக்கைகள் அவசியமானதே. ஆனால் அவை பக்கவிளைவுகளை ஏற்படுத்தி வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தாத வகையில் அமைய வேண்டும்.

பொறுமையும் பணிவும் அதிகமானால்
கோழை என்பர்.
அன்பும் இரக்கமும் அதிகமானால்
ஏமாளி என்பர்.
புன்னகையும் வெகுளித்தனமும்
அதிகமானால் பைத்தியம் என்பர்.
கோபமும் கேள்வியும் அதிகமானால்
திமிர் என்பர்.
மொத்தத்தில் மனிதனிடம் இருக்க
வேண்டியது எதுவுமே
இல்லாதவன் தான்
இங்கு மனிதன் என்பர்.



# கனடாவில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பள்ளிக்கூடத்தில் தன்னுடன் தங்கியிருந்த பல மாணவர்கள் முதற்குடி மக்களின்



Cowessess First Nation Chief Cadmus Delorme

Cree மொழி பேசுபவர்கள் எனவும் அவர்களுக்குத் தாங்கள் Cree மொழி இரவு நேரங்களில் படிப்பித்து வந்ததாக வும் கூறினார். தாங்கள் இரவில் பாடம் நடத்தும்போது மற்றைய மாணவர் வெளியில் மதகுருமார் யாராவது வருகிறார்களா எனப் பார்ப்பதற்காகக் காவல் நிற்பர் என்றார்.

சஸ்கச்சுவான் மாகாணத்தில் உள்ள முதற்குடி மக்களின் தலைவர் ஊடகங் களுக்குத் தெரிவிக்கையில் மேரிவல் இந்தியன் குடியிருப்புப் பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற ஆய்வு போல் சஸ்கச்சுவான் மாகாணம் முழுவதிலும் நடைபெற்று வந்த 22 குடியிருப்புப் பள்ளிக்கூடங்களில் தாங்கள் ஆய்வு நடத்த உள்ளோம் என்றார்.

சஸ்கச்சுவான் மாகாணத்திலுள்ள 74 முதற்குடி மக்கள் சமூகங்களின் கூட்டமைப்பின் தலைவர் Bobby Cameron, CTV ஊடகத்திற்குத் தெரிவிக்கையில் தாங்கள் சஸ்கச்சுவான் மாகாண முதல்வர் Scott Moe உடனும் கனடிய மத்திய அரசின் முதற் குடிமக்களின் சேவைக்கான முதலமைச்சர் Marc Miller உடனும் ஓர் உடன்பாட்டிற்கு வந்துள்ளோம். அதன் மூலம் சஸ்கச்சுவான் மாகாணத்தில் இருந்த 22 குடியிருப்பு பள்ளிக்கூடத்திலும் தேடல்களை நடத்த உள்ளோம் என்றார். நிலக்கீழ் புதைகுழிகள் அல்லது கல்லறை களைக் கண்டுபிடிக்க நவீன தொழில்நுட்ப உதவியுடன் தரையை ஊடுருவிச் செல்லும் மின்காந்த அலைக் கருவி பாவிக்கப்படுகிறது (Ground Penetrating Radar). இக்கருவியால் வெளியிடப்படும் மின்காந்த அலைகள் நிலத்தை ஊடுருவிச் சென்று ஒரு பொருளில் பட்டுத் திரும்பி வருவதன் மூலம் அந்தப் பொருள் அடையாளம் காணப்படுகிறது.

Bobby Cameron, CTV ஊடகத்திற்கு மேலும் தெரிவிக்கையில், கனடா முழுவதிலும் இருந்த இந்தியன் குடியிருப்புப் பள்ளிக் கூடங்களில் இந்தத் தேடல் நடத்தப்பட வேண்டுமென முதற் குடிமக்கள் கனடிய அரசை வலியுறுத்தி வருகின்றனர் என்றார்.

1800ஆம் ஆண்டில் இருந்து 1996ஆம் ஆண்டுவரை கனடா முழுவதிலும் 150,000 முதற் குடிமக்களின் குழந்தைகள் 139 குடியிருப்புப் பள்ளிக்கூடங்களில் பராமரிக் கப்பட்டு வந்துள்ளனர். கனடாவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையின்படி 4,100 சிறுவர் கள் இந்தப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் போது இறந்துள்ளனர் எனக் கணிக்கப் பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையைச் சரிவரக் கணக்கிட முடியாது உள்ளபடி யால் இவ் எண்ணிக்கை 6,000ஆக இருக்கலாம் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 4,000 பக்கங்கள் கொண்ட அறிக்கை 2015இல் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் இந்தக் குடியிருப்புப் பள்ளிக் கூடத்தில் முதற்குடி மக்களின் குழந்தை கள் மீது மேற்கொள்ளப்பட்ட கடுமையான துஷ்பிரயோகம் விவரிக்கப்பட்டுள்ளது. இதில் பெண்கள் தங்கும் இடத்தின் அவசரகாலக் கதவுகள் எப்போதும் பூட்டப் பட்ட நிலையில் இருந்தன எனவும், உள்ளூர் சிறுவர்களைப் பள்ளிக்கூடச் சிறுவர்கள் சந்திப்பதற்காக பாடசாலையை விட்டு வெளியில் வந்தால் அவர்களது தலைமுடி வெட்டப்படும் எனவும் குறிப் பிடப்பட்டுள்ளது. இவ்வாறு தண்டனையாகத் தலைமுடி வெட்டப்பட்ட ஒரு மாணவியின் கதை விவரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் இவ்வாறு புதைகுழி களும் கல்லறைகளும் இந்தியன் குடி யிருப்புப் பள்ளிக்கூடங்களுக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 1970ஆம் ஆண் டில் சஸ்கச்சுவான் Battleford பள்ளிக் கூடத்துக்கு அருகில் 72 அடையாளம் குறிப்பிடப்படாத கல்லறைகளும், 2001ஆம் ஆண்டில் அல்பேட்டா மாகாணத்திலுள்ள Dunbow குடியிருப்புப் பள்ளிக்கூடத்தில் 34 சிறுவர்களின் புதை குழிகளும் மற்றும் இரண்டு வருடங்களுக்கு முன்னர் சஸ்கச் சுவான் Muskowekwan குடியிருப்புப் பள்ளிக்கூடத்துக்கு அருகில் 24 அடையாளம் குறிக்கப்படாத கல்லறை களும் கண்டுபிடிக்கப்பட்டன.

கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ யூன் 24ஆம் திகதி மேரிவல் இந்தியன் குடி யிருப்புப் பள்ளிக்கூடத்திற்கு அருகில் 751 அடையாளம் குறிப்பிடப்படாத கல்லறை கள் இருக்கின்றன என்ற செய்தி வெளி யானபோது, இப்புதிய கண்டுபிடிப்பு மிகவும் வருத்தத்தைத் தருவதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில் அவர் இக்கண்டுபிடிப்பு இந்நாட்டின் முதற் குடி மக்கள் எதிர்கொண்ட, மற்றும் தொடர்ந்து எதிர்கொள்ளும் ஒழுங்கு முறையான இனவெறி (systemicracism), பாகுபாடு (discriminition), அநீதி (injustice) ஆகியவற்றை நினைவூட்டுகிறது என்றார். குடியிருப்புப் பள்ளிக்கூடங்களில் இறந்த

நாங்கள் கேட்பது என்னவென்றால் இந்தச் சம்பவத்தின் பின்னர் நாங்கள் குண மடைந்து (heal) வலிமை பெறும்வரை நீங்கள் எங்களுடன் நிற்கவேண்டும் என்பதே" என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் "நாம் அனைவரும் நமது அறியாமையைக் கைவிடவேண்டும். இந்நாட்டு முதற்குடி மக்களின் கலா



குழந்தைகளைக் கண்டுபிடித்து நினைவு கூருவதற்கு முதற்குடி மக்களுக்கு உதவு வதற்காக கனடிய மத்திய அரசு $27 மில்லியனை ஒதுக்கி உள்ளதாக முதற் குடிமக்களுக்கான அமைச்சர் Carolyn Bennett அறிவித்துள்ளார்.

கோவெஸ்ஸஸ் முதற் குடிமக்களின் தலைவர் Cadmus Delorme மேரிவல் இந்தியன் குடியிருப்புப் பள்ளிக்கூடத்தில் அடையாளம் குறிப்பிடப்படாத 751 கல்ல றைகள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நடத்திய மெய்நிகர் ஒளிபரப்பில் "இதைப் பார்த்துக்கொண்டிருக்கும் எல்லோரையும்

சாரத்தை அறியாது இன வெறி காட்டு வதைத் தவிர்க்க வேண்டும். நாங்கள் உங்களிடம் பரிதாபத்தை (pity) எதிர் பார்க்கவில்லை ஆனால் எங்களைப் புரிந்து கொள்ளுமாறே (understanding) கேட்கிறோம்" என்றார்.

பிரிட்டிஷ்கொலம்பியாவிலுள்ள Cranbrook நகரத்தில் இருந்த St. Eugene's Mission பள்ளிக்கூட வளவில் 182 அடையாளமிடப் படாத கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள் ளதாக Lower Kootnay Band முதற்குடி மக்களின் பிரதிநிதி ஜுன் 30இல் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

## கனடாத்தாய் எங்கள் தாய்

குவலயத்தில் சிறந்த வளம் கனடாத் தாய் -அவள்
குலமகள் போல் ஒளிர்ந்து காண்கின்றாள்
பன்நாட்டு மக்களையும் பக்குவமாய் அணைத்து
தன்மானத்துடனேதான் காக்கின்றாள்!

தங்கம் போல் அவளும் குணமுடையாள் என்றும்
மங்காப் புகழ் கொண்டு மிளிர்கின்றாள்
நலங்கள் யாவும்தான் நலம் பெறவே எமக்கு
சலனமிலா நற்சேவை தருகின்றாள்!

தாராள மனம் கொண்டு தரணி மிசை
காராளர் போலெம்மைக் காக்கின்றாள்
சராசரி மனிதனுமே சற்குணனாய் இங்கு
நிறைந்த மனமே பெற்று வாழ்கின்றாள்!

பல்கலா சாரமதைப் பேணித்தான்
நல்லவராய் வாழவே நல்வழி தந்தாள்
எல்லோரும் ஓர்குடும்பம் என்றுணர்ந்தே நாமும்
வல்லமை பெற்று வாழ உறுதி பெற்றோம்!

ஓர்பக்கம் மலைவளமும் கடல்வளமும் சூழ
மார்தட்டி மாண்புடனே மங்கையவளும்
சீர்வரிசை உள்ளவள் சிறப்புமிகு சீதேவி
நேர்மை வழிநின்று நீதி நிலை நாட்டினளே!

தங்கம் பொன் வெள்ளி எனதரமான லோகங்கள்
பங்கமிலா கனடாத்தாய் பக்குவமாய் வழங்குகிறாள்



அத்தனையும் அன்னைக்கு ஆதனங்களாய்
அமைந்ததே
வித்தகியாய் வல்லவியாய் விளங்குகிறாள் மாதரசி!

வெள்ளை நிற வெண்பனியும் விலைமதிப்புப்
பெற்றதுவாம்
கள்ளமிலா அன்னையைத்தான் களத்தில் இறங்கியதே
எம் உணவாம் கோதுமையும் இனிதே வளர்வதற்கு
தம்மை உணவாய் வழங்கி தண்ணளியும் பெற்றதுவே!

வாழ்க கனடாத் தாய் வாழிய வாழியவே
புலம்பெயர் வாழ் தமிழர்நாம் வாயார வாழ்த்துகிறோம்
வளங்கள் பல பெற்று பல்லாண்டு வாழியவே
பலம் கொண்ட பெண்ணாக உளம் நிறைந்து
வாழியவே!

எழுதியவர் திருமதி மனோன்மணி வரதராசா
ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியை ரொறொன்ரோ


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# தமிழ்நாட்டில் தேர்தல் களங்கப்பட்டுள்ளது!

**நேர்காணல் -தமிழிசை சௌந்தரராஜன் நேர்கண்டவர் - கண்ணன்**

அடுக்குமொழிப் பேச்சு, தினம் செய்தியாளர்கள் சந்திப்பு என்று தமிழ்நாட்டின் அரசியல் களத்தில் பரபரப்பாக இருந்தவர், தமிழிசை சௌந்தரராஜன். தமிழ்நாட்டு மக்களின் மனதில் 'நம்ம வீட்டுப் பெண்' என தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்து வைத்திருப்பவர். தெலுங்கானா ஆளுநராக தமிழிசை நியமிக்கப்பட்டபோது, கி.வீரமணி உட்பட எதிர்க்கட்சியினர் அனைவரும் வாழ்த்துத் தெரிவித்ததே அதற்கு சாட்சி. மாநில பாஜக தலைவராகப் போராட்டங்கள், கட்சி கூட்டங்கள் என்று சூறாவளியாய் சுழன்று கொண்டிருந்த தமிழிசை, ஆளுநரான பின்னர் கடந்த இரண்டு ஆண்டுகளாக அமைதியாக இருக்கிறார். இந்தியாவில் ஆளுநரான முதல் 'தமிழ் பெண்', 'இந்தியாவிலேயே குறைந்த வயது ஆளுநர்' என்ற சிறப்பையும் பெற்றுள்ள தமிழிசை, தற்போது புதுச்சேரி மாநில துணைநிலை ஆளுநராகக் கூடுதல் பொறுப்பும் வகிக்கிறார். புதுச்சேரி வந்திருந்த தமிழிசையை சந்தித்தோம்.

**தெலுங்கானா ஆளுநராக நியமிக்கப்பட்டதற்கான அறிவிப்பு வந்தபோது எப்படி உணர்ந்தீர்கள்?**

இருபது ஆண்டுக்காலம் கட்சிக்காகக் கடுமையாக உழைத்துள்ளேன். அதனால், எனக்கு ஏதாவது ஒரு பதவி வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால், ஆளுநராக நியமிப்பார்கள் என்று எதிர்பார்க்கவில்லை.

**காங்கிரஸ் மூத்த தலைவர் குமரி அனந்தன் மகள் மேலும், ஆர்.எஸ்.எஸ் பாஜக குடும்ப பின்புலம் இல்லாதவர். ஆனாலும், பாஜக மாநிலத் தலைவர், தற்போது ஆளுநர் என உயர்ந்த பதவிகளை அடைந்திருக்கிறீர்கள். எப்படி இது சாத்தியமானது?**

பலம்தான் முக்கியம். பின்புலம் முக்கியம் இல்லை. எனது குடும்பத்தை காங்கிரஸ் குடும்பம் என்பதைவிடத் தேசிய பாரம்பரியம் கொண்ட குடும்பம் என்று சொல்லலாம். எனது இரண்டு தாத்தாவும் சுதந்திரப் போராட்ட வீரர்கள். தேச பக்தியில் ஈடுபாடு கொண்டவர்கள். நான் காங்கிரஸ் குழந்தையாகவே வளர்ந்ததால் காங்கிரஸில் எல்லோரையும் தெரியும். ஆனாலும், ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு பாஜகவில் இணைந்தேன். கட்சி என்னை முன்னிறுத்துவதிலேயே இது ஒரு நேர்மையான கட்சி என்பது புரிந்திருக்கும். தலைவர்களின் வாரிசாக இல்லாவிட்டாலும் கடுமையாக உழைத்தால் பாஜகவில் ஒருவர் உயர்ந்த பதவிகளுக்கு வரமுடியும் என்பதற்கு நானே சாட்சி.

**ஏன் காங்கிரஸ் கட்சியிலிருந்து மாறுபட்டு பாஜகவில் சேர்ந்தீர்கள்?**

சுதந்திரம் அடைந்த பின்னர் காங்கிரஸ் கட்சியின் 50 ஆண்டுக்கால ஆட்சியில் நான் ஒரு வளர்ச்சியையும் பார்க்கவில்லை. நான் தஞ்சை மருத்துவக் கல்லூரியில் இருந்தபோது அம்புலன்ஸ் இல்லாமல் குழந்தைகள் இறந்து போவார்கள். ஆனால், கனடாவிற்குப் பயிற்சிக்குப் போனபோது ஹெலிகொப்டரில் குழந்தைகளை அழைத்து வருவதைப் பார்த்தேன். நமது நாடு இவ்வளவு பின்தங்கியா இருக்கிறது என்ற வேதனை மனதில் எழுந்தது. வாஜ்பாய் வந்தவுடனேயே தங்க நாற்கரச்சாலை, பொக்ரான் அணுகுண்டு சோதனை குறித்துப் பேசினார். அதையெல்லாம் காங்கிரஸ் 50 வருடத்தில் செய்திருந்தால் நாடு எங்கேயே போயிருக்குமே. வளர்ச்சி அரசியலில் காங்கிரஸ் அக்கறை செலுத்தாதது என்னை ஈர்க்கவில்லை. எனவே அக்கட்சிக்குப் போகவில்லை.

என்னைப் பொறுத்தவரை தேசியமும் தெய்வீகமும் ஒன்று. இரண்டையும் தேடிக் கொண்டிருந்தேன். எனது அப்பாதான் இரண்டையும் சொல்லிக் கொடுத்தார். அதனை நான் வாஜ்பாயிடம் பார்த்தவுடன், எனக்கான தேசியக் கட்சி இதுதான் என்று சேர்ந்துவிட்டேன்.

**தெலுங்கானா ஆளுநராக நீங்கள் அறிவிக்கப்பட்ட போது மாநில தலைவர் பொறுப்பில் இருந்து உங்களை மாற்றவே இந்தப் பதவி என விமர்சனங்கள் வந்ததே?**

அப்படியெல்லாம் இல்லை. 2019 டிசம்பரில் எதார்த்தமாகவே எனது தலைவர் பதவிக் காலம் முடிய இருந்தது. எனவே, நான் ஆளுநர் ஆகவில்லை என்றாலும் டிசம்பர் தாண்டி தலைவராக நீடித்திருக்க முடியாது.

**அரசியல் பொறுப்புகளில் இருப்போர் ஆளுநராக வரக்கூடாது என்று சர்க்காரியா கமிஷன் கூறியுள்ளது. எனவே, உங்கள் ஆளுநர் பதவி சட்ட விரோதமானது என்றாரே அப்போதைய புதுச்சேரி முதலமைச்சர் நாராயணசாமி?**

ஒரு தமிழ் பெண் ஆளுநராக ஆகியிருக்கிறாரே என்று பாராட்டுவதற்குப் பதிலாக, இப்படிப்பட்ட விமர்சனத்தை நாராயணசாமியிடம் எதிர்பார்க்கவில்லை. மேலும், அவர் கூறும் தகவல் தவறு.



**தமிழிசையை இப்போது தெலுங்கிசை என்கிறார்களே?**

ஹாஹாஹா;. நான் தேசிய இசை. தேசியத்திற்குள்தான் தமிழிசையும் இருக்கிறது, தெலுங்கிசையும் இருக்கிறது.

**ஆனால், நீங்கள் இந்தியிசையாகவும் சமஸ்கிருத ஆதரவு இசையாகவும்தான் இருந்திருக்கிறீர்கள் என்று விமர்சிக்கப்படுகிறதே?**

அது தவறான விமர்சனம். நான் இந்தியையும் சமஸ்கிருதத்தையும் ஆதரிக்கவில்லை. குறிப்பாக பாஜகவினரும் ஆதரிக்கவில்லை. நாங்கள் தாய்மொழிக் கல்வியைத்தான் ஊக்கப்படுத்துகிறோம். இது தெரியாமல் அநாவசியமாக எங்கள் மீது பழி சுமத்துகின்றனர். தேசியக் கட்சி என்பதால் எங்கள் கட்சியில் இந்தி, சமஸ்கிருதம் பேசுவோர் இருக்கின்றனர் அவ்வளவுதான்.

**உங்கள் முக்கிய பலமே அடுக்கு மொழியில் பேசுவதுதான். தெலுங்கிலும் அடுக்கு மொழியை எதிர்பார்க்கலாமா?**

நிச்சயம் எதிர்பார்க்கலாம். தெலுங்கு மொழி தெரியாது என்றாலும் தெலுங்கைக் கற்றுக்கொண்டு அடுக்கு மொழியில் கண்டிப்பாகப் பேசுவேன். எங்கள் அலுவலகத்தில் நிறைய தெலுங்கு சகோதரர்கள் இருக்கின்றனர். அவர்களிடம் கற்றுக் கொண்டு வருகிறேன். என் சிறப்பை விட்டுக் கொடுக்க மாட்டேன். நான் எப்போதும் மொழி ஆளுமையில் ஆர்வம்கொண்டவள்.

**தெலுங்கானா ஆளுநராக தமிழ்நாட்டு வளர்ச்சிக்கும் பாடுபடுவேன் என்றீர்களே, எப்படிப் பாடுபடுவீர்கள்?**

இரண்டு மாநிலத்திற்கும் பாலமாக செயல்படலாம். கலாசார ரீதியில் பாடுபடலாம். அதன் பகிர்மானங்களை முன்னெடுத்துச் செல்லலாம். ஓர் ஆளுநர் என்பவர் கல்வி நிறுவனங்களின் வேந்தர். ஆக, தெலுங்கானாவிற்கும் தமிழ்நாட்டு கல்வி நிறுவனங்களுக்கும் சில ஒப்பந்தங்கள் செய்து கொள்ளலாம். தமிழகத்தின் வளர்ச்சி எனது உரிமை. தெலுங்கானா வளர்ச்சி எனது கடமை. இரண்டையும் விட்டுக் கொடுக்க மாட்டேன்.

**கர்நாடகாவைச் சேர்ந்த சூரப்பாவை அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தராக தமிழ்நாட்டு ஆளுநர் பன்வாரிலால் நியமித்தபோது சர்ச்சையானது. நீங்கள் தெலுங்கானாவில் ஒரு தமிழரைத் துணைவேந்தராக நியமிப்பீர்களா?**

துணை வேந்தர் பதவிக்கு மொழியோ, இனமோ, மதமோ தகுதி கிடையாது. திறமை மட்டும்தான் தகுதி. சூரப்பா கன்னடர் என்பதற்காகக் கொடுக்கப்படவில்லை. அவரது கல்வித் தகுதிக்காகத்தான். துணைவேந்தர் பதவியைப் பொறுத்தவரை இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின்படி எந்த மாநிலத்தின் இருந்தும் தேர்ந்தெடுக்கலாம். சட்டவிதிகளுக்குட்பட்டே எடுத்தனர். மொழி, இனம், மதம் சார்ந்ததல்ல துணைவேந்தர் தேர்வுகள். அதில் நானும் கவனமாக இருப்பேன்.

**தமிழ்நாடு பாஜக தலைவராக நீங்கள் சாதித்தது என்ன?**

இளம் வயதிலேயே நான் பாஜக மாநில தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டேன். 44 லட்சம் உறுப்பினர்களைச் சேர்த்தது, கட்சியின் கொள்கைகளை மக்களிடம் கொண்டுபோய் சேர்த்தது, பிரம்மாண்டமான கூட்டங்களை நடத்தியது, தமிழ் தாமரை யாத்திரையைத் தொடங்கி பட்டி தொட்டி எங்கும் சுற்றுப் பயணம் செய்து சேர்த்தது என நிறைய சொல்லலாம். 'என் கட்சியை பலப்படுத்தவேண்டும். என் நாட்டுக்கு சேவை செய்யவேண்டும். மற்றவர்களுக்கு உதவவேண்டும்' என்ற ஒரு வெறி என்னை எப்போதும் இயக்கிக் கொண்டே இருந்தது. எல்லோருக்கும் உதவவேண்டும் என்ற அன்பு கலந்த வெறி அது. மன நிறைவாகத்தான் என் பதவிக்காலம் முடிந்தது. ஆனாலும், எனக்கு ஒரு மனத்தாங்கலும் உள்ளது. என் பதவிக் காலத்தில் சட்டமன்றத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் பாஜக சார்பாக மக்கள் பிரதிநிதிகளை வெற்றிபெற வைக்க முடியவில்லை என்ற வருத்தம் தான் அது.

**படித்தவர், விஷயம் தெரிந்தவர், கடின உழைப்பாளி, பண்பாளர், பேச்சாளர் போன்ற பலம் இருந்தும் தேர்தல் அரசியலில் உங்களால் வெற்றிபெற முடியவில்லையே?**


ஓட்டுக்குப் பணம் கொடுக்க முடியவில்லை. அதனால்தான் தோல்வி அடைந்தேன். நேர்மையான அரசியல்வாதியாக இருந்ததால்தான் தோல்வி ஏற்பட்டது என்பதில் எனக்குப் பெருமைதான். என்னை எதிர்த்துப் போட்டியிட்ட எந்த வேட்பாளரை விடவும் ஆற்றலிலோ, அறிவிலோ, நேர்மையிலோ, சுறுசுறுப்பிலோ நான் குறைவானவள் கிடையாது. ஆனாலும் ஏன் வெற்றிபெற முடியவில்லை? தேர்தல் களங்கப்பட்டிருப்பதுதான் காரணம்.

**நீங்கள் ஆளுநராக நியமிக்கப்பட்டதற்கு உங்கள் அப்பா குமரி அனந்தன் என்ன சொன்னார்?**

என்னை வந்து சந்தித்து, 'என் காலத்திற்குள் எனது மகள் இந்த உயரத்தை எட்டிவிட்டாள் என்பதைப் பார்க்க மகிழ்ச்சியாக உள்ளது. இன்னும் பல சாதனைகளை படைக்க வேண்டும். நேர்மை, ஒழுக்கம், உயர்வு இருக்க வேண்டும்' என்று வாழ்த்தினார். நெகிழ்ந்து விட்டேன்.

**உங்கள் கணவர்?**

தொடர்ச்சி 12ஆம் பக்கம்...)


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# நாம் அனைவரும் கோவிட்-19 தடுப்பூசியைப் பற்றி மேலும் அறிய விரும்புகின்றோம்

கோவிட்-19 தடுப்பூசி நடவடிக்கை




## நான் ஏன் தடுப்பூசி போட வேண்டும்?

இது கோவிட்-19 இலிருந்து பாதுகாக்கிறது மேலும் நீங்கள் நோய்வாய்ப்படுவதைத் தவிர்க்க உதவுகிறது. பலர் சிகிச்சைப் பெறாமல் குணமடைந்தாலும், சிலர் கோவிட்-19 ஆல் இறக்க நேரிடலாம் அல்லது இதய நோய் அல்லது நிமோனியா போன்ற நுரையீரல் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரிடலாம். நரம்பு மண்டலம் கூட பாதிக்கப்படலாம்

## நம்மைத் தொடர்ந்து பாதுகாத்துக் கொள்வோம்!

வரவிருக்கும் மாதங்களில், பெரும்பான்மையான மக்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளாத வரையில், கோவிட்-19 நீடித்து இருக்கும்.




உங்கள் இடைவெளியை கடைபிடியுங்கள்



உங்கள் முகத்தை மறைககவும்



உங்கள் சட்டையின் கைககளில் இருமவும்



கைககளை கழுவவும்

Québec.ca/vaccinCOVID

1 877 644-4545

20-279-31FA

Votre gouvernement

Québec

# நாமும் நமது இல்லமும் 586

## கனடிய ஆதனக் கொள்வனவாளர்கள்!



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடிய முறையில், இன்றைய கால கட்டத்தில் ஆதனம் வாங்குவது ஓர் இலகுவான முறையாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம், போதியளவு ஆதனங்கள் சந்தையில் காணப்படாததும், வாங்குபவர் நினைப்பது போன்ற ஆதனங்கள் சந்தையில் இல்லாததும் ஆகும். அதிகமான வாங்குபவர்களும், குறைந்தளவு ஆதனங்கள் சந்தையில் இருப்பதும் காரணமாகலாம். ஆதன விலையின் அதீத அதிகரிப்பால் கனடிய மக்கள் ஆதனங்களை விற்று வேறு ஆதனங்கள் வாங்குவதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வருகின்றனர். மே 2021இற்கு முன்பாக மாதாமாதம் ஆதன விலையிலும் வியாபாரத்திலும் அதிகரிப்புத் தொடர்ந்தே வந்துள்ளது. கொரோனா-19 மக்கள் வாழ்வில் மட்டும் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. ஆதன வியாபாரத்திலும், விலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது.

ஓர் ஆதனத்தை வாங்குவதற்குப் பலபேர் (multiple buyers) போட்டியிடுவதன் காரணத்தால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக மக்களுக்கு வருமானம் இருந்த போதும் அதனைச் செலவு செய்யக்கூடிய வழிமுறைகள் இருக்கவில்லை. இதனால் உழைத்த பணம் சேமிப்புக்கே சென்றுள்ளது. அத்துடன் வீட்டிலிருந்தே தொழில் புரியலாம் என்ற நிலையும் ஏற்பட்டதால் ஒன்ராறியோவின் சகல பகுதிகளிலும் விலை அதிகரித்ததைக் காணக் கூடியதாக இருந்தது. ஏற்கனவே ஜப்பான் வாரத்திற்கு ஐந்து (5) நாட்கள் வேலை என்பதை நான்கு (4) நாட்களாகக் (4 days work week) குறைத்துள்ளது. இதனால் மக்களுக்குப் பணத்தைச் செலவழிக்க மூன்று (3) நாட்கள் கிடைத்துள்ளது. மிக விரைவில் இம்முறை மற்றைய நாடுகளிலும் ஆரம்பிக்கப்படலாம். இது ஒரு வகையில் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்காகக் கொண்டு வரப்பட்டதாகவும் கொள்ளலாம்.


ஏற்கனவே ஒன்ராறியோ அரசு கோவிட்-19 இன் முடக்க நிலையிலிருந்து, நிலை மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளதால் மக்கள் அதிக நேரத்தை வெளியே செலவழிப்பர் என எதிர்பார்க்கலாம். அத்துடன் கடந்த மாத இறுதிப்பகுதியிலிருந்து நிறுவனங்கள், உள்ளரங்குகள் வியாபாரத்துக்காக தொடங்கப்பட்டு விட்டன. இதனால் கனடியர், ஆதனம் வாங்குவதைவிட பொழுதுபோக்கிற்கே அதிக நேரம் செலவிடலாம். தவிர்க்க முடியாத சந்தர்பத்தில் ஆதனம் வாங்க / விற்க வேண்டிய நிலையில் உள்ளோரை விட மற்றவர்கள் ஆதனங்கள் வாங்குவதைத் தள்ளிப் போடலாம். ஏற்கனவே வியாபாரத்தில் சிறிதளவு மெத்தனப்போக்கான தன்மையைக் காணக்கூடியதாக உள்ளது. இந்



நிலைமை தொடருமா என்பது எதிர்வரும் மூன்று மாதங்களில் ஓரளவு தெரியவரும். எனினும் இன்றைய நிலைமையில் ஆதன வியாபாரத்தின் ஏற்ற இறக்கத்தைப் பற்றிக் குறிப்பாகச் சொல்வது இலகுவாகத் தெரியவில்லை. கிழமைக்கு கிழமை இடத்துக்கு இடம், ஆதன வியாபாரம் வித்தியாசமான நிலைமையிலே காணப்படுகிறது.

இருப்பினும் அதிக சந்தர்ப்பங்களில் ஒன்றுக்கு மேற்பட்டோர் தமது ஆதனம் வாங்கும் பத்திரத்தை (Purchasing offer or Agreement of purchase and sale) விற்போருக்குக் கொடுக்கின்ற போதிலும் விற்பவர்கள் (Sellers) எதிர்பார்க்கும் விலையை பெற முடியவில்லை என்பதும் காணக்கூடியதாக உள்ளது. சில சந்தர்ப்பங்களில் ஜனவரி பெப்ரவரியில் விற்ற விலையைவிட குறைந்த விலைகளிலும் ஆதனம் விற்கப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. எனினும் கனடிய எல்லைகள் திறக்கப்படும் போது புதியவர்கள் நாட்டுக்கு (new immigrants or students) வரும்போது நிலைமை நிச்சயமாக மாறும் என்பதனை எதிர்பார்க்கலாம்.

ஏற்கனவே உலகின் பல நாடுகளில் இருந்தும் கனடாவிற்குப் பலர் தமது மேற்படிப்பைத் தொடர விரும்புவதைக் காணலாம். அண்மையில் வெளிவந்த ஆய்வின்படி அவுஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற நாடுகளை விட வெளிநாட்டு மாணவர்கள் (மக்கள்) கனடாவை மேற்படிப்புக்குச் சிறந்த நாடாகக் கருதுகின்றனர். மேலும் ஏறக்குறைய 40,000 பன்னாட்டுப் பட்டதாரிகளுக்கு (foreign graduates) நிரந்தர வதிவிட உரிமையை கனடா வழங்கத் தீர்மானித்துள்ளது. இவை யாவும் கனடாவின் ஆதன வியாபாரம் சிறப்படையும் என்பதைக் கட்டியம் கூறுகின்றன.




## தமிழ்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

பட்டு அது சமன்படுத்தப்பட்டது, மனித உரிமைகள் பிரச்சினை- ஜி.எஸ்.பி வரிப் பிரச்சினைகளை சமாளிப்பதற்காகவே தமிழ் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர் என்கின்ற விமர்சனங்களுக்கு அப்பால், இப் 16 தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையால் அவர்களின் குடும்பங்களில் ஏற்பட்டுள்ள மகிழ்ச்சியில் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் இணைந்து கொள்வோம். ஏனைய தமிழ் கைதிகளும்



விடுதலையாவதற்காக போராடுவோம்.

## கனடா அன்னையின் பிறந்தநாள்

சொத்து சுகம் இழுந்து நாடும் இழுந்து நீர் நிலை தாண்டி
ஏதிலியாய் ஏங்கித் தவித்து ஓடி வந்தோரை
ஏற்று உண்ண உணவு உடுபிடவை வசதியும் கொடுத்து
உயிர் காத்து வாழுவைக்கும் கனடாவின்
பிறந்தநாள் இன்று

அகவை 154இல் கால் பதியும் அன்னை கனடாவின்
இந்நாளில் ஈழவர்நாம் எல்லோரும் கூடி
ஆசி கூறி அன்பு மாலை சூடி செந்தமிழால் நாட்டுக்கு
நல்லாசி மேலோங்க வேண்டுமென
வாழ்த்துவோம் வாரீர்

மேப்பிள் இலை சின்னம் பொறித்த கனடாவின்
வெள்ளை சிகப்பு வர்ணம் கொண்ட தேசியக்கொடிதனை
எல்லோரும் எழுந்து நின்று ஓ கனடா கீதம் இசைத்து
தேசம் எங்கும் கொடி தெரிய வானுயர ஏற்ற
வாழ்த்துவோம் வாரீர்

கல்லூரிகளில் கல்வி கற்பதற்கு கட்டுப்பாடற்ற வயதெல்லை
வெளி நாட்டவர்களும் வந்து கல்வி கற்க வசதி
பலரும் பதினொரு மாகாணங்களிலும் சென்று வாழவும்
பணி புரியவும் வழி கோலிக் கொடுக்கும் கனடாவை
வாழ்த்துவோம் வாரீர்

ஆங்கிலமும் பிரெஞ்சும் அரசு மொழியாக இருக்கையில்



ஆதிமொழி தமிழ் மொழியையும் அங்கீகரித்து
பாடசாலைகளில் ஒரு பாடமாக பிள்ளைகள் பயில
அனுமதி வழங்கிய கனடா அன்னையை
வாழ்த்துவோம் வாரீர்

மக்கள் யாபேரும் அமைதியுடனும் சமாதானத்துடனும்
வாழ வேண்டுமென்ற கருத்துடன் மக்களைக் காத்திடும்
இளம் தலைவன் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவின்
மக்கள் ஆட்சி மீண்டும் மலர்ந்திட வேண்டுமென
வாழ்த்துவோம் வாரீர்



கவிநாதம் பரந்தாமன்




Eastern Toronto is home to one of the largest Tamil communities outside of the Indian subcontinent. This vibrant community came together to raise $3 million from donors around the world for a new Chair in Tamil Studies at the University of Toronto Scarborough. The Canadian Tamil Congress and Tamil Chair Inc. worked with individuals, businesses, alumni, governments and community organizations to realize this remarkable achievement.


The first of its kind in Canada, the new chair will help inspire inclusive excellence at University of Toronto Scarborough by contributing to our efforts to give students from every background a chance to engage with the history, language, literature and traditions of one of the world's most enduring cultures.

கனடாவின் மிகப்பெருமை வாய்ந்த பல்கலைக்கழகத்தின் வரலாற்று முதன்மை மிக்க இந்த முயற்சிக்குப் பங்களிப்புச் செய்த அனைத்து அமைப்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

UNIVERSITY OF TORONTO

To learn more about the Chair in Tamil Studies and the community of donors that helped create it, please visit: https://uoft.me/TamilCampaign

# அன்பிற்கினியாள் - திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

Helen என்ற மலையாளப் படத்தின் மீள் தயாரிப்பான இப்படத்தில் குடும்ப உறவுகளும், நாம் பிற மனிதர்களுடன் பழகும் முறையும் விவரிக்கப்படுகின்றன. இவ் வருடம் வெளியான இப்படத்தின் பிரதம கதாபாத்திரம் 'அன்பு' என அழைக்கப் படும் அன்பிற்கினியாள் ஆவார். கனடா விற்குச் சென்று வேலை செய்ய விரும்பும் அன்பு தற்போது இந்தியாவில் ஒரு (fast food) உணவகத்தில் வேலை செய்கிறார். அவரது வாழ்க்கை வேலையிலும், வீட்டில் அவரது அப்பாவுடனும் சாதாரணமாகச் செல்கிறது.



அன்பிற்குத் தாயோ சகோதரர்களோ இல்லை. தன்னைத் தனியாக விட்டு விட்டுக் கனடாவிற்கு அன்பு செல்வதை அதிகமாக விரும்பாத அன்பின் அப்பா, அன்பின் காதலன், தனது வீட்டுப் பிரச்சனையால் வேலையில் அதிருப்தியாக இருக்கும் அன்பின் முதலாளி போன்ற கதாபாத்திரங்கள் இப்படத்தில் முக்கியமாகின்றன. இதில் அன்பின் காதலைப்பற்றி அவரின் அப்பாவுக்குத் தெரியாது. அன்பும் தந்தையுமாக நடிக்கும் இருவரும் உண்மையில் மகளும் தந்தையும் ஆவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த உறவுகள் படத்தில் ஒன்று சேரும் பொழுது கதையின் முக்கிய தருணமாக அது அமைகிறது. அன்பின் தந்தைக்கு அவளுடைய காதலைப் பற்றி தவறான முறையில் தெரியப்படுத்தப்படுகிறது. இதனால் அன்பிற்கும், அப்பாவிற்கும், அவளது காதலனுக்கும் இடையில் உள்ள உறவுகள் விரிசல் அடைகின்றன.

இந்த நேரத்தில் அன்பு தொடர்ந்து தனது வேலையில் கவனம் செலுத்துகிறார். தந்தை மற்றும் காதலனுடன் பேசாத அன்பு அவளது வேலை இடத்தில் இறைச்சி பாதுகாப்புக் குளிர்சாதன அறையில் தற்செயலாகப் பூட்டப்படுகிறார். அவர் எங்கே இருக்கிறார் என்று தெரியாத தந்தையும் காதலனும் அன்பைத் தேடுகின்றனர். தந்தை காதலன் மீது சந்தேகப்பட்டு காவல்துறையினரிடம் முறையிடுகிறார். அன்பு அந்தக் குளிர்சாதன அறையில் இருந்து தப்புவாரா? என்பதை இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.

இப்படத்தின் பிரதம கதாபாத்திரமும், மிக முக்கியமான பெண் கதாபாத்திரமும் அன்பு ஆவார். அனைவரையும் சிரித்த முகத்து டன் வரவேற்பவராகவும், அன்பு ஆகவும் நடிக்கும் கீர்த்தி பின்பு குளிரில் அவதிப் படும்போது நன்றாக நடித்துள்ளார். இதனால்தான் படம் விறுவிறுப்பாகச் செல்கிறது. கீர்த்திக்கு இது இரண்டாவது படமாக இருந்தாலும் அன்பின் இயற்கை யான அன்பான சுபாவம் இப்படத்தில் தெளிவாகக் காட்டப்படுகிறது.

முதலில் கூறியதைப் போல் இப்படத்தில் மனித உறவுகள் முக்கியமாகக் காட்டப் படுகின்றன. அன்பின் காதலனின் பின் புலத்தினால் அன்பின் தந்தை அவரைச் சந்தேகிக்கின்றார். அன்பையும் காதலனை யும் முதலே கண்ட காவலதிகாரியும் அன்பு ஓடிப் போய்விட்டாள் என நினைக்கிறார். பலரால் மதிக்கப்படாமல் புறக்கணிக்கப்படும் கட்டிடப் பாதுகாவலர் அன்பின் அன்பினாலும் மரியாதையாக நடத்தும் விதத்தாலும் இக்கதையில் ஒரு முக்கியமான கதாபாத்திரமாக மாறுகிறார். இவற்றின்மூலம் பட இயக்குனர் சொல்ல வரும் கருத்து என்னவென்று தெரிகிறது. கடைக்குக் காவல் காப்பவரும் மனிதர் தான், அவருக்கும் நாம் மதிப்புக் காட்ட வேண்டும். மற்றவர்களைப் பற்றித் தெரி யாமல் அவர்களை அலட்சியம் செய்யக் கூடாது. பொதுவாக நாம் அனைவரிடமும் அன்பு காட்ட வேண்டும்.

கதாநாயகியின் பெயரான இப்படத்தின் தலைப்பிலேயே இக்கருத்தைக் காணலாம். இக்கதை இந்தியாவில் நடைபெற்ற சில உண்மைச் சம்பவங்களைத் தழுவியே எழுதப்பட்டுள்ளது. இது எல்லோரும்



பார்க்கக் கூடிய ஒரு மிகவும் நல்ல படம்.

# தமிழ்நாட்டில்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

எல்லோரையும்விட மகிழ்ச்சியானது எங்கள் டாக்டர்தான் (கணவரை டாக்டர் என்றே அழைக்கிறார்). அவருக்கு எப்போதும் எனது உயர்வு மீது மிகுந்த நம்பிக்கை உண்டு. என்னை அரசியலில் ஈடுபடுத் தியது அவர்தான். நான் சாதாரணமாக மருத்துவத்தில் ஈடுபட்டிருக்கும்போது, 'உனது திறமைக்கும் சமூக அக்கறைக் கும் மருத்துவராக மட்டும் வாழ்க்கை இருக்கக்கூடாது. உன் அப்பா மாதிரி அரசியலுக்கு வரவேண்டும். அதற்கான முழுத் திறமையும் உனக்கு இருக்கிறது' என்று என்னை ஊக்கப்படுத்தி அரசியலில் ஈடுபட வைத்தார். என் உயர்வில் ஒவ்வொரு நிமிடத்தையும் அனுபவிக்கக் கூடிய இணையர் அவர். இந்த உயர்வையும் கொண்டாடுகிறார்.

**மோடி தலைமையில் பாஜக ஆட்சிக்கு வந்த போது மக்களிடம் நிறைய எதிர்பார்ப்புகள் இருந்தது. மோடி அனைத்தையும் செய்வார் என்ற நம்பிக்கையும் பெரும்பாலானோரிடம் இருந்தது. ஆனால், அந்த நம்பிக்கை இப்போது சிதைந்துள்ளது. நாட்டின் பொருளாதாரம் பெரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது?**

எப்போதும் ஒரு பின்னடைவு வாழ்க்கை யில் வரத்தான் செய்யும். அதுதான் இப்போது வந்துள்ளது. அதைச் சரி செய்ய முயற்சி எடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

**அரசியலுக்கு வரவிரும்பும் பெண்களுக்கு உங்கள் ஆலோசனை?**

எனக்கு ஒரு தடை வந்தது என்றால் 16 முறை குதிப்பேன். தடையால் சோர்ந்து விடுவதைவிடப் பாய்ந்துபோவது நல்லது. பெண்ணால் முடியாதது ஒன்றுமே இல்லை. வழிகளில் கற்கள் இருக்கும், முட்கள் இருக்கும், பூக்களும் இருக்கும். கற்கள் தடுக்கினால் ஒதுக்கிவிட்டு, முட்கள் குத்தினால் எடுத்து போட்டுவிட்டு, மலர் பாதை காத்திருக்கிறது என்ற நம் பிக்கையோடு முன்னேற வேண்டும். பாதை யும் பயணமும் முக்கியமல்ல, எங்கே போய் சேரப்போகிறோம் என்பதே



முக்கியம். பாதை கரடுமுரடாக இருக்கலாம், சேருகின்ற இடம் கோட்டையாக இருக்க வேண்டும். தோல்விகளையும் அவமானங்களையும் சந்தித்தாலும் உறுதியோடும் கலங்காத தன்மையோடும் இருக்க வேண்டும். அதே நேரம் நமது மகிழ்ச்சியையும் எதற்காகவும் விட்டுக்கொடுத்து விடக்கூடாது. மகிழ்ச்சி யை விட்டுக்கொடுத்து நாம் வாழ்க்கையில் என்ன சாதிக்கப் போகிறோம்? வீட்டையும் பார்க்க வேண்டும், நாட்டையும் பார்க்க வேண்டும். நாட்டிற்கே அரசியாக இருந்தாலும் இல்லத்தரசியாகவும் இருக்க வேண்டும். இரண்டு அரசியாக இருப்பது கடினம்தான். எனவே, அதை சமன் படுத்திக் கொள்ளவேண்டும்.

**தமிழ்நாட்டு மக்களை 'மிஸ்' பண்றோம் என்ற எண்ணம் இருக்கிறதா?**

தமிழிசை தமிழ்நாட்டு மகள். இப்போது தெலுங்கானா என்ற புகுந்தவீட்டில் இருந் தாலும், ஒரு பெண்ணுக்குத் தாய்வீட்டின் மீதான பாசம் எப்போதும் இருக்கும்.

# செந்தாமரை மலர்போல முகம்மலரும் கனடியர்!

வந்தாரை வாழவைக்கும் வளநாடு
வானுயர்ந்த மலைகள்சூழ் எழில்நாடு
நொந்தாரின் துயரங்காணின் உதவியிங்கு
நோய்பிணிகள ண்டாமல் காக்கும்நாடு
எந்நாளும் கதிரவனின் ஒளியைக்காண
ஏக்கமுறும் மனிதர்வாழ் மலைநாடு
செந்தாமரை மலர்போல முகம்மலரும்
செம்மைமிகு கனடியர்கள் வாழ்நாடு!


வருடத்தில் பலமாதங்கள் கனடாவில்
வசந்தங்கள் முற்றாகத் தொலைந்திருக்கும்
திருடர்போல் கருமேகங்கள் சூரியனைக் கௌவி
தீராதகாதலுடன் தன்னுள்ளே அணைத்திருக்கும்
வருடவரும் காற்றலைகள் குளிரைச்சுமந்திருக்கும்
வலுத்த இருளதுவும் வேளைக்கே சூழ்ந்துவிடும்
பருவமழை பலத்தோடு வீழ மண்பசுமைகாணும்
பனிகொட்ட மரங்களெல்லாம் இலைகளுதிர்க்கும்!

கருணை மனம் கொண்டவர்கள் கனடியர்
கடுமையான உழைப்பிலும் வல்லவர்கள்
தருணம்வர தயங்காது பிறர்க்குதவிடுவார்
தாய்மையைப் போற்றிடவும் தயங்காரிங்கே
பெருமையாய்ச் சொல்வதெனில் பெண்ணிற்கு
முன்உரிமை
பேணிக்காக்கும் பிள்ளைகட்கோ தனியுரிமை



குருடர்கூடத் தனித்திங்கே வாழ்ந்திடல் கூடும்
கூடிவாழும் செல்லப்பிராணி உதவிநிற்கும்!

உலகிலுள்ள நாடுகள்போல் கனடாவுமின்று
உயிர்கொல்லும் கொரோனாவால் துயருறினும்
பலம்குன்றி செயலிழந்து துவளாமல்
பௌர்ணமி நிலவுவானில் ஒளிதரவந்ததுபோல்
புலம்பெயர் அகதிக்குப் புனர்வாழ்வுகிட்டினாற்போல்
புதுயுகம் காண்பதற்குப் பூரித்தெழுகிறது
நலம்காணும் நிச்சயமாய் கொரோனாவீழும்
நாடும் நல்லுழைப்பால் சுபீட்சம் காணும்!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்


MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university

Special classes
- Advanced function
- Calculus & vectors
- Data management

All Classes available in Scarborough & Stouffville



Mr.S.F.Xavier (Teacher)

Contact: 647.340.9490 / 416.732.2228

31 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**MARKHAM**
1 bedroom bsmt for rent. No separate entrance, entrance through front door. 1 Parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **(647) 760-8329**

**FINCH & LIVERPOOL**
2 bedroom bsmt for rent. kitchen, 1 full washroom, living room, laundry. Sep. entrance, 1 Parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **(647) 606-7789**

**MORNINGSIDE & STAINS**
1 bedroom bsmt for rent. Sep.entrance, sep. laundry. 2 min bus stop 24/7 bus route. Avail. July 15 2021.
**416.335.1003 / 647.898.1819**

**MCCOWAN & DENISON**
1 bedroom bsmt for rent. Sep.entrance, parking. Close to schools, stouffville hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.960.9985**

**TAPSCOTT & FINCH**
1 bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC bus. Parking. NO Smoking allowed. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416-837-1860**

**NEILSON & FINCH**
1 bedroom bsmt for rent. Sep.entrance. C lose to TTC, ERA center, Malvern Mall. Ideal for a couple or single working professional.
தொடர்புகளுக்கு : **647.656.1131**

**KENNEDY & EGLINTON**
2 bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to Kennedy subway. Avail. August.
**647.296.7932/647.920.5499**

**MARKHAM & STEELES**
3 bedroom bsmt for rent. Sep.entrance, laundry, utilities.Close to bus, bank,store. Preferred family only. Avail. immediately.
**647.772.5546 / 647.856.9907**

**HWY401 & NEILSON**
1 bedroom bsmt for rent.
Close to all facilities
தொடர்புகளுக்கு : **416.575.5055**

**BRIMLEY & DENISON**
2 Bedroom Bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**Contact Nathan: 416.843.0011**

**MARKHAM & STEELES**
2+1 Bedroom bsmt for rent. Sep. entrance. 1 parking, laundry. Close to Amazon, TTC, YRT, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647-284-2735**

**EGLINTON & BELLAMY**
2 Bedroom basement with separate Hall, Kitchen & entrance available for rent. Close to all amenities. Avail. immediately.
**416.671.0085/647.960.6427**

மேலும் பக்கங்கள் 14, 15, 16

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
2 Bright Bedroom+1washroom Bsmt for rent. Sep.entrance, Sep. laundry. 1 parking. Close to all facilities.
**Contact : 416.909.2433**

**NEILSON & MCLEVIN**
2 Bedrooms Bsmt for rent. Sep.entrance, Parking. Avail. immediately. (For Students Girls Only or Single Family)
தொடர்புகளுக்கு: **647-773-7086**

**KENNEDY & DENISON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, 1 Car parking. No pets / No smoking. Family preferred. Avail.immediately
**416.820.0258 / 416.912.8352**

**9TH & HIGHWAY 7**
2 bedroom bsmt for rent. Laundry. 2 parking spots. No pets. 2 min walking distance to school. Avail.immediately.
தொடர்புகளுக்கு : **416.258.8253**

**BOVAIRD & HWY 410**
2 Bedroom Bsmt For Rent. Sha. Laundry, 2 Parking, No Smoking/Pets. Ideally Couples or Young Family. Available Immediately.
தொடர்புகளுக்கு : **647-241-8947**

**MORNINGSIDE & SHEPPARD**
3 bedroom newly finished bsmt for rent. Sep. entrance, parking. Close to school, bus, stores, Walmart. Avail. Immediately.
**416.896.7250/647.646.9754**

**MARKHAM & DENISON**
2 bedrooms New bsmt fo rent. Sep. entrance, Sep. laun dry. Utilities included + 1 car parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416-317-3055**

**MARKHAM & MIDDLEFIELD**
1 large Bedroom bsmt for rent. Se. Entrance, parking. Close to all facilities. Avail. July 15, 2021.
தொடர்புகளுக்கு : **647.975.5789**

**EGLINTON AVE E & MIDLAND**
1 bedroom basement apt for rent, with washer and dryer & parking. available immediately
தொடர்புகளுக்கு: **416.908.9162**

**WARDEN & ELLESEMERE**
1 Bedroom Bsmt for rent. Sep. Entrance. Working female preferred for long term stay. Laundry & parking. Close to TTC.
தொடர்புகளுக்கு : **416.505.4449**

## BASEMENT FOR RENT

**STAINES ROAD & STEELES AVENUE**
2-bedroom basement separate entrance in the garage. Available from July 1st.
தொடர்புகளுக்கு: **416.803.1984**

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. 1 parking, laundry. Close to Amazon, TTC, YRT, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647-284-2735**

**MCCOWAN RD & HWY 401**
1 Bedroom bsmt for rent. Couple or singles. Rent $1200+HYDRO. Working person or 65+ seniors preferred.
**416.857.5252/416.752.4444**

**MIDDILFIELD & STEELES**
2 Bedroom newly renovated bsmt for rent. Sep. entrance, 1 parking. Close to all facilities.
**Contact Kala at : (416)272-0666**

**MORNINGSIDE & MCNICOLL**
2 bedroom bsmt for rent. Sep entrance. Sep. laundry. 1 parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.804.0231**

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, Sep. laundry. Close to school, bus. Avail. August 01, 2021.
தொடர்புகளுக்கு: **416.737.1146**

**MCCOWAN & DENISON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, internet. Female only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.908.1250**

**BRIMLEY & ELLESMERE**
2 Bedroom Walk-Out Bsmt for rent. 2 Parking. No Smoking/no Pets. Couple or small Family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647-456-3144.**

**HWY 7 & DONALD COUSENS PARKWAY**
Brand New Bright & Spacious 2 Bedroom bsmt for rent. sep. entrance, 1 parking, new appliances & & laundry.
தொடர்புகளுக்கு: **647-620-5634**

**MARKHAM &14Th AVE.**
1 bedroom bachelor bsmt for rent. Sep. entrance, car parking, laundry. Avail. immediately
தொடர்புகளுக்கு: **647.770-2881**

**வீடு வாடகைக்குபெற்றிட / கொடுத்திட** வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட அழையுங்கள்: **647.402.2937**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
1 bedroom Bsmt Apartment For Rent. Sep. entrance & laundry. No Pets or smoking.
தொடர்புகளுக்கு: **416-473-3052**

**NEILSON & SHEPPARD**
1 bedroom bsmt for rent. Sep. entrance & a parking. Close to Malvern Mall, TTC bus stop and HWY 401.
**Call me at 416-894-2845.**

**NEILSON & ELLESMARE**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, Laundry, Parking. Close to TTC, U OF T. No pets & No smoking. Avail. Augu. 01, 2021.
தொடர்புகளுக்கு : **416.477.8746**

**STEELES & STAINES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Working Female perferred. Close to all facilities. Avail. immediately.
**647.609.8362 / 416.292.6252**

**MARKHAM & ELLESMERE**
2 bedroom basement for rent. 1 parking, laundry. Close to TTC, schools, Hospital, shopping. Family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647-773-6294**

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt for rent, sep.entrance Preferred Families only. laundry, schools, close to all facilities. Avail. immediately.
**905.554.7928 / 647.401.7928**

**MCCOWAN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to School, Hospital, Shopping & TTC (24 hours). Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.877.7570**

**MCLEVIN & SHEPPARD**
1 Bedroom walkout bsmt for rent. No pets, no smoke. Couple or female preferred. Avail. immediately.
**416.454.9370 / 416.817.3634**

## ROOM FOR RENT

**MCLEVIN & NEILSON**
Room is available for rent immediately. Close to Colleges, Highway, Grocery stores and malls. Female or students preferred.
தொடர்புகளுக்கு: **647-710-6661**

**MARKHAM & LAWRENCE**
Room for rent. Sep. entrance, Sep. kitchen. Sep. Washroom. Close to TTC, HWY, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.706.4881**

**MCCOWAN & DENISON**
சந்திப்புக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய அறை ஒன்று வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : **647-678-2599**

**MCCOWAN & FINCH**
Master bedroom on a condominium. Washroom inside the room. Shared kitchen & laundry. Renting for female only.
தொடர்புகளுக்கு: **647.677.9369**

## ROOM FOR RENT

**BRIMLEY & LAWRENCE**
1 bedroom for rent in the basement.
Sep. entrance. No smoking/no pets.
Working people/student preferred
தொடர்புகளுக்கு : **647-855-5122**

**FINCH & NEILSON**
Rooms for rent. Basment also available.
Close to bus, neilson park & eraa
supermarket. Avail. immediately.
தொடர்புகளுக்கு :**647. 648.1272**

**KENNEDY & LAWRENCE**
1 Room for Rent. Parking, laundry.
Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.923.8283**

**LAWRENCE & PHARMACY**
1 Room for rent in a 3 bedroom bsmt. Male
only. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

**9TH LINE & STEELES**
1 room for rent in a basement.
Sep.entrance, 1parking. No smoking/no
pets. Avail. immediately
**416.817.6910/905.209.7998**

**MARKHAM & 16TH AVE**
Room for rent.
Avail. August 01, 2021.
தொடர்புகளுக்கு : **647-444-4712**

**KENNEDY RD & EGLINTION AVE.**
1 Room for rent in a 2 bedroom apartment.
Rent $900+HYDRO. Working person or 65+
seniors preferred.
**416.857.5252/416.752.4444**

**FINCH & PHARMACHY**
1 Room for rent in main floor. Laundry.
Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.838.6636**

**MARKHAM & EGLINGTON**
1Room for rent in an apartment. Shared
kitchen & washroom ONLY. Ladies
preferred over 40. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.339.1989**

**FINCH & NEILSON**
Rooms for rent.
Close to all facilities. Avail. immediately
**Akilan. 647.648.1272**

**MORNINGSIDE & OLDFINCH**
1 bedroom for rent main floor. Sep.
washroom. Parking. TTC
accessible. Female (student) preferred.
தொடர்புகளுக்கு : **647-550-9689**

## BASEMENT FOR RENT

**VICTORIA PARK & HWY 401**
2 bedroom basement with a
washroom and kitchen and living
room. Rent includes all utility costs
and wifi included. One parking spot
included with rent.
தொடர்புகளுக்கு : **647-779-9048.**

மேலும் பக்கங்கள் 13, 15, 16

## CONDO FOR RENT

**Markham & Denison**
3bedrooms, 2full washrooms Condo for
rent. Close to all facilities.
Avail. from August.
தொடர்புகளுக்கு: **416.908.9162**

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
3 bedroom bungalow house for rent.
3 car parking, 2 washroom.
Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.201.1222**

**MORNINGSIDE & SHEPPARD E**
2 Bedroom + 1 Bathroom. 1 Outdoor
Parking incl. Laundry. Close to 401, TTC.
No pets or no smoke. Avail. Immediately
தொடர்புகளுக்கு : **647-677-8181**

## BASEMENT FOR RENT

**Birchmount & Lawrence.**
2 Bedroom & 1 Full bathroom
bsmt for rent. Sep. Entrance,
Kitchen & laundry included.
Parking available
தொடர்புகளுக்கு : **416.464.1491**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedroom revovated bsmt for
rent. Sep. entrance, utilities.
Close to all facilities.
Avail. immediately.
**416.898.1242 / 647.707.7827**

## BASEMENT/ROOM FOR RENT

**TAPSCOTT/FINCH**
2 அறைகள் அடங்கிய basement சகல
வசதிகளுடன் உடனடியாக வாடகைக்கு
உண்டு. couple preferred.
அதே வீட்டின மேல் தளத்தில ஒரு
அறையும் வாடகைக்கு உள்ளது. பெண்கள்
விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **(647)707-6345**

## BASEMENT FOR RENT

**HWY 7 & 9TH LINE**
2 bedroom high Ceilings basement
Apartment for rent. Sep.entrance. kitchen,
parking, Laundry, Elementary, high
schools. Closed to all facilities. No pets.
Couple or small family preferred.
Avail Immediately.
தொடர்புகளுக்கு: **416.834.3568**

## BASEMENT FOR RENT

**WARDEN & SHEPPARD**
2 Bedroom walkout bsmt for
rent. Sep.entrance. close to all
facilities. Parking, landry, wifi
included. Avail.Immediately
தொடர்புகளுக்கு: **416-268-8855**

## CONDO FOR RENT

**NEILSON RD & MCLIVEN AVE**
2 Bedroom condo for rent.
2 washroom, balcony, 1 parking,
laundry in building.
1 minute walking distance to bus.
Avail. July 10, 2021
தொடர்புகளுக்கு: **416.728.7261**

## ROOM FOR RENT

**Ajax South** 3 அறைகளுடன் கூடிய
**Bangalow house** இன் மேற்தளத்தில்
இரண்டு அறைகள் வாடகைக்கு
உண்டு. (Share washroom / Kitchen)
வயோதிபர்கள் சாப்பாட்டுடன்
பராமரிக்கப்படுவர். வேலை
புரிபவர்களும் விரும்பத்தக்கது.
**647.608.6097 / 647-916-5990.**

## BASEMENT FOR RENT

**KENNEDY & DENISON**
2 bedroom basement with 1 full wash
room, Living room, dining room, laundry
room & kitchen included. Sep. entrance
with 1 Parking Spot. Close to TTC bus stop
No pets & smokers Available ASAP.
தொடர்புகளுக்கு: **416-844-3018**

## BASEMENT/ROOM FOR RENT

**BELLAMY & EGLINTON**
Basement / Room for
rent. தொடர்புகளுக்கு:
**647.667.0482**
**416.902.4353**

## ROOM FOR RENT

**MCCOWAN & FINCH**
1 large rooms for rent in an
Apartment with furniture. Parking,
internet. No smoke or no pets. Close
to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.276.6884**

## ROOM FOR RENT

**Lawrence & Morningside**
Room for rent in a basmt.
Rent monthly $ 550.
Laundry includes & heater,
A/C available. TTC in front of the
house. Most likely mens.
**Contact : 416.358.9747**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**House, Condo, Basement**
**வாடகைக்கு உள்ளது**
**அழையுங்கள்.**
**647.861.8240**

## BASEMENT FOR RENT

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom, 2 washroom bsmt for
rent. Sep. entrance, 2 car parking,
laundry. Close to mall, bus stop,
Stores & ext. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.205.9829**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**
2 bedroom bsmt for rent.
Sep. entrance. 2 minute
walking distance to steeles rd,
ttc, stores. Avail. immediately.
**647-720-5367 / 905-472-6866**

## HOUSE FOR RENT

**MARKHAM & ELLESMERE**
3 bedroom Bungalow
house for rent. (main
floor) Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.996.6977**

## HOUSE FOR RENT

**NEILSON & FINCH**
3 bedroom house for rent.
2 parking, recently renovated
bathrooms, floors & paint. Walking
distance to TTC, tamil stores and all
amenities. Avail. August 01, 2021.
தொடர்புகளுக்கு: **647-628-6991**

## HOUSE FOR RENT

**MARKHAM & STEELES**
Brand new 3000 SQ. FT. house for rent.
4 bedrooms, 4 Washrooms, fully
upgraded, new appliances. Across the
street from Amazon. No pets. no smoking.
Avail. August 2021.
**416-729-9858 & 416-735-4240**

## HOUSE/BASEMENT FOR RENT

**FINCH & MIDDLEFIELD**
1 bedroom basement for rent.
**BRIMLEY & STEELES**
1 bedroom basement for rent.
**MARKHAM & STEELES**
3 bedrooms house for rent.
தொடர்புகளுக்கு: **647.686.8590**

## HOUSE/BASEMENT FOR RENT

**KENNEDY & ELLESMERE**
3-bedroom **house** for rent (Main floor) & 3
bedroom renovated Spacious **basement**
for rent. Sep. entrance, 5 Car Parking, sep.
Laundry. Walking distance to Ellesmere
LRT Subway station, closer to highway 401
/ 404 & Frequent Buses.
தொடர்புகளுக்கு : **647.247.9221**

## HOUSE FOR RENT

**Full house for rent in Pickering**

**Rose bank/ Sheppard**

Upper floor 3 bedrooms, 2.5 washrooms, 3 car parkings. Including finished basement with 1 bedroom and 1 full washroom. Close to all facilities. 2 minutes from highway 401. Avail. immediately.

**Contact: Sajanthan (647) 233-6892**

## HELP WANTED

தமிழ் **Restaurant** இற்கு அனுபவமுள்ள சமையல் ஆட்கள் தேவை. தங்குமிட ஒழுங்கு செய்து தரப்படும்.

**Call: (416)419.7548**

## COOK WANTED

**victoria park & ellesmere**

அமைந்துள்ள **canadian restaurant** க்கு Cook தேவை

**Call: (416) 709.5000**

## FOR SALE

Shoppers drug mart இல் வாங்கிய உடல் இயலாதவர்களுக்கான இலகுவான Bed உம் அவர்களை தூக்குவதற்கான Lift உம் விற்பனைக்கு உண்டு.

விமலா: **647.739.5993**

## பராமரிப்பாளர் தேவை

இடம்: **MEADOWVALE/SHEPPARD**

குழந்தைகள் பராமரிப்பாளர் தேவை வீட்டுக்கு வந்து குழந்தைகளைப் பராமரிக்க ஆள் தேவை. சம்பளமும் நேரமும் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **647-654-8468**

## முதியோர் பராமரிப்பு

முதியோர்களுக்கு பொறுப்பான, திருப்தியான, 24 மணித்தியால சேவை வழங்கப்படும். நீண்டகால, குறுகியகால, தற்காலிக வதிவிட வசதி செய்து தரப்படும். வேலைக்கும் ஆட்கள் தேவை

**647-325.9186/647.667.0482**

## SALE / RENT

**House for Sale / Rent**

**Please contact for further details.**

**416-648-7283**

## HOUSE FOR RENT

**ORTON PARK & ELLESMERE**

3 Bedroom house for rent. Washroom, kitchen, Parking. Close to all facilities. Avail. immediately. No Pets.

**647-998-0181/905 -471-2444**

## HIRING

**Dental office**இல் **Dental Receptionist / Dental assistant** வேலைக்கு தகுதி உள்ளவர் தொடர்பு கொள்ளவும்

**647 -761-6644**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**GAS STATIONS IN PETERBOROUGH.**

Full time cashier needed.

சம்பளம் பேசித் தீர்க்கப்படும். தங்குமிட வசதி செய்து தரப்படும்

தொடர்புகளுக்கு: **416.545.9959**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.

**647.512.9820 / 647.868.2440**

## பராமரிப்பாளர் தேவை

ஸ்காபரோவில் பகுதியில் 70 வயதான பெண் ஒருவரை பராமரிக்க பெண் பராமரிப்பாளர் தேவை. ஊதியம் வேலை நேரம் பேசி தீர்மானிக்கப்படும்

தொடர்புகளுக்கு : **416.558.4998**

பொறுமையும் பணிவும் அதிகமானால்
கோழை என்பர்.
அன்பும் இரக்கமும் அதிகமானால்
ஏமாளி என்பர்.
புன்னகையும் வெகுளித்தனமும்
அதிகமானால் பைத்தியம் என்பர்.
கோபமும் கேள்வியும் அதிகமானால்
திமிர் என்பர்..
மொத்தத்தில் மனிதனிடம் இருக்க
வேண்டியது எதுவுமே இல்லாதவன் தான்
இங்கு மனிதன் என்பர்.

## BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**

2 Bedroom Basement for rent. Sep. entrance. Parking, laundry. 3-minutes walking distance to steeles Road. Steps to school. No pets Or No Smoke. Avail. July 01, 2021

தொடர்புகளுக்கு: **647.991.4437**

## HOUSE / BASEMENT FOR RENT

**MCCOWAN & ELLESEMERE**

4 bedroom & 2 full washroom house for rent. Sep. laundry, parking. Rent $2400+50% utilities. NO PETS/NO SMOKE/NO ALCOHOL. Close to all facilities. Avail. August, 15, 2021.

**MARKHAM & PAINTED POST - Rent $1800+50 %**

**MARKHAM & SHEPPARD Rent $1600+50 %**

3 bedroom+3 full washroom bsmt for rent. Sep. Entrance. Close to all facilities. Avail.immediately.

**Contact: 647.507.2148/ 647.864.1051**

## BASEMENT FOR RENT

**OLD KENNEDY & STEELES**

1 bedroom, kitchen, washroom and living room with sep. entrance. Washer and dryer, one parking included. Available immediately. Close to 3 different banks, grocery stores, access to 3 different route TTC buses and etc.

தொடர்புகளுக்கு: **647.680.1773**

மேலும் பக்கங்கள் 13, 14

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## HOME RENOVATION

RENOVATION CONTRACTOR FOR ALL YOUR HOME RENOVATION NEEDS

We do basement, kitchen and washroom renovations including

- Framing
- Tiling
- Painting
- Plastering
- Hardwood floors etc

**PLEASE CALL: RAJAH (416) 474-8053**

## HOUSE FOR RENT

**MCCOWAN & BRIMORTON**

3-bedroom main floor with 2 parking for rent. laundry on main floor. Close to all amenities. No pets, no smoke. we will need credit checking, letter of employment as well as ID's of those living in the house before renting. Available from July 15th or August 01, 2021.

**647.588.2525/416.587.1213/ sivashuresh@msn.com**

## HELP WANTED

Hiring PR and Canadian Citizens

**1. Sewing Machine Operator**

**2. Packing Helper**

For a Factory in Scarborough at Markham Rd and Finch

**Attractive Pay** **Full-time Job**

Contact Akin - **(416) 830-8134** 9 AM - 5 PM

## வேலைக்கு ஆட்கள் தேவை

**YONGE & DAVENPORT** இல் அமைந்துள்ள RESTAURANTஇற்கு LINE COOK & Kitchen helper வேலைக்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு: **647.637.5345**

## HELP WANTED

**WHITBY/OSHAWA**

இல் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு உடனடியாக ஆள் தேவைப்படுகின்றது.

All Positions (Cooks, Food runner, Food packager, Front House manager)

**We are looking for help to hire all position for a restaurant.**

(Cooks, Food runner, Food packager, Front House manager)

**Please call: 416.258.7156**

## DRIVER WANTED

**Stouffville** பகுதியில் இயங்கிவரும் ***PIZZA STORE*** க்கு **PIZZA DILIVERY DRIVER WANTED** தேவை. ***PIZZA STORE HELPER ALSO WANTED***. Stouffville & Markham பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. Payment flexible.

தொடர்புகளுக்கு : **416.953.4933**

## HELP WANTED

**Landscaping, garden, and masonry work**

ஆகிய வேலைகளில் வேலைகளில் அனுபவமுள்ளவர்கள் உடனடியாக வேலைக்குத் தேவை. தாயகத்தில் மேசன் வேலை செய்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

Looking for a person with some experience in landscaping, garden, and masonry work. Back home farmers are welcome! Located in Scarborough, Morningside & Lawrence. Work hours from 7am to 5pm. Cash paid weekly.

**Please call Frank at (416)269-5174**

## COOK WANTED

Restaurant is located in **Richmond Hill**

BREAKFAST COOK,
PREP-COOK & DISHWASHER WANTED.
FULL TIME/ PART TIME.

தொடர்புகளுக்கு: **647-335-8888**

## BUS SERVICE

**RAINBOW CHARTER SERVICE INC.**

**(SCARBOROUGH)**

உங்கள் பயணத் தேவைகள் எதுவானாலும் அழையுங்கள்.

Please call or text me : **416.451.0055**

**info@rainbowcharterservice.ca**

## HELP WANTED

**Landscaping, garden and masonry work** ஆகிய வேலைகளில் அனுபவமுள்ளவர்கள் உடனடியாக வேலைக்குத் தேவை. தாயகத்தில் மேசன் வேலை செய்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

Looking for a person with some experience in landscaping, garden and masonry work. Back home farmers are welcome! Located in Scarborough, **Morningside & Lawrence**. Work hours from 7am to 5pm. Cash paid weekly.

**Please call - Frank at (416)269-5174**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**PRK DOOR & WINDOWS (MARKHAM & PROGRESS)**

தொழிற்சாலைக்கு மரவேலையில் அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை. மற்றும் Spray painting அனுபவமுள்ளவர்களும் தேவை.

தொடர்புகளுக்கு: **416.875.4119**

## MEDICAL OFFICE RECEPTIONIST

Basic Skill requirements: Communication, Computer: familiar with electronic medical record system ( if not, we provide training).

**Send your resume: muraleeavs@gmail.com**

## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன் / மணமகள் எம்மிடம் தாராளமாக உள்ளன. தேவையெனில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

### மணமகள் தேவை


1. கனடியக் குடியுரிமையுள்ள வயது 32 பட்டதாரி மணமகனுக்கு கனடா அல்லது இலங்கையில் மணமகள் தேவை. நட்சத்திரம் சுவாதி, கிரகபாவம் 27. (V)

2. அமெரிக்கக் குடியுரிமையுள்ள 38 வயதுடைய விவாகரத்துப் பெற்ற பொறியியலாளருக்கு அமெரிக்கா அல்லது கனடாவில் மணமகள் தேவை. நட்சத்திரம் பூசம், கிரகபாவம் 50. (K.O)

### மணமகன் தேவை

3. கனடியக் குடியுரிமையுள்ள வயது 26, நட்சத்திரம் பூராடம், கிரக பாவ 36, செவ்வாய் இல்லாத பட்டதாரி மணமகளுக்கு கனடாவில் மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு : **437.244.6737**



## யோக சோதிடம்

கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்

சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

ஒன்றாறியோ முழுவதும் லட்சக்கணக்காணோர் தங்கள் கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக்கொண்டார்கள்.

**உங்கள் பங்கை செய்யுங்கள். தடுப்பூசியை போட்டுக்கொள்ளுங்கள்.**

ஹெல்த் கனடாவினால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள், மருத்துவ மனைகள், டாக்டரின் காரியாலயங்கள், பார்மசிகள் மற்றும் பெருந்தொகையாக தடுப்பூசி போடும் இடங்களில் கிடைக்கும். ஒவ்வொரு தடுப்பூசியும் முன்பிருந்த சாதாரண நிலைமைக்கு நம்மை நெருக்கமாகக் கொண்டுவரும்.

**ontario.ca/bookvaccine** இல் உங்கள் நியமிப்பை இன்றே பதிவுசெய்யுங்கள் அல்லது 300 மொழிகளில் உதவி பெற்றுக்கொள்ள **1-888-999-6488** ஐ அழையுங்கள்.

ஒன்றாறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario

# ஆழியவளை

**தொடர் கட்டுரை**

## யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்



**கந்தசாமி முத்துராஜா**

ஆழியவளையிலும் அயற் கிராமங்களிலும் குறிப்பிட்டுக்கூறும் அளவிற்குப் பிற ஊர்த் திருமணத் தொடர்புகள் ஏற்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், சுன்னாகம், அளவெட்டி, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, பருத்தித் துறை, கரவெட்டி, கற்கோவளம், கிளிநொச்சி, விசுவமடு, முல்லைத்தீவு, திருகோணமலை, கண்டி, வவுனியா, புங்குடுதீவு, மட்டக்களப்புப் போன்ற இடங்களில் உள்ளோர் இப்பகுதியில் திருமணம் செய்துள்ளனர்.

இத்தகைய திருமண உறவுகளால் சாதிகளும் கலந்துள்ளன. இந்நூலில் கரையார் ஆள் ஒருவர் அம்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை விவாகம் செய்தது பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பொழுது ஊர் சென்றபொழுது அக்குடும்பத்தினரைக் காண முடிந்தது. கணவர் இறந்து பின்னர் மாமனும் இறந்த நிலையில் இப்பொழுது குடும்பம் அன்றாட வாழ்க்கைக்கே சிரமப்படுகிறது. அப் பெண்ணையும் பிள்ளைகளையும் கண்ட பொழுது இறந்த கணவனின் தமையனார் வெளிநாட்டில் இருப்பதைக் குறிப்பிட்டு அவரிடம் உதவி கோரலாமே என்று நான் கூறியபொழுது அப்பெண் பின்வருமாறு கூறினார்:
“அவர் இப்ப கிட்டடியில் ஊர் வந்தவர். (மகனைக் காட்டி) உவனைச் சொன்னனான் போடா, போய்ப் பெரியப்பாவிடம் உதவி கேளடா என்று. உவன் போறதுக்கு வெட்கப்படுகிறான். அவர் எங்களைச் சந்திக்காமலே பிரான்ஸ் போய்விட்டார்.”

சாதிப்படிநிலை உணர்வினைப் பொறுத்த வரையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நெகிழ்ச்சி ஒன்று காணப்படுகிறது. இருப்பினும் சீதனக் கொடுப்பனவு கொள்வனவு நடக்காமல் இல்லை. இந்தச் சீதன நிர்ப்பந்திப்புக்கான ஒரு காரணம் நிச்சியமாக வெளிநாட்டுப் பணமாகும். ஐந்து இலட்சம் பணமும் ஐந்து இலட்சத்துக்கு மீன்பிடி உபகரணமும் நகைகளும் என்று பத்து இலட்சத்துக்கு மேல் சீதனச் சந்தையில் மாப்பிள்ளைகள் விற்கப்படுவது தெரிய வருகிறது. தங்கள் தங்கையை முடித்த மாப்பிள்ளைக்கு ஒரு மோட்டார் சயிக்கிளை வெளிநாட்டில் இருக்கும் மச்சான்மார் மேலும் இனாமாகவும் வழங்கி விடுகின்றனர். எனவே இந்த வெளிநாட்டுப் பண அலைக்கு முன்னால் சாதாரண ஊர் உழைப்பாளிகள் முகம் கொடுக்க முடியாது திண்டாடுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

1960, 1970களில் நிலவிய சமூக நியமங்கள் பல இப்பொழுது மறைந்துள்ளமை தெரியவருகிறது. இதற்கான முக்கிய எடுத்துக்காட்டு கோயிற் பூசைகளின் போது தெரிகிறது. வெளிநாட்டுப் பணவசதியுள்ள ஒரு குடும்பத்தினர் நடத்தும் கோயிற் பூசைகளுக்கு அதே நிலையிலுள்ள மற்றைய குடும்பத்தினர் செல்வது மிகப்பெரிதும் குறைந்துவிட்டது. கோயில் தலத்தில் தரப்படும் பிரசாதத்தைக் கைநீட்டிப் பெறுவது தமக்கு ஒரு அந்தஸ்துக் குறைவினை ஏற்படுத்து வதாகக் கருதும் போக்கு ஓரளவில் பரவி வருவதாகவே பேசப்பட்டுக் கொள்கிறது.



தொழிற் கூட்டுணர்வு தற்போதும் முற்காலம் போலத்தான் காணக்கூடியதாக உள்ளது. ஒருவரது வள்ளத்தை ஏழெட்டுப் பேர் சேர்ந்து தள்ளி விடுகின்றனர். தொழிலால் மீண்டு வரும் போது எல்லோரும் சேர்ந்து வள்ளத்தை இழுத்துக் கடற்கரைப் புட்டியில் வைக்கின்றனர். கடலில் ஆபத்து நேரும்போது உதவுகின்றனர்.

இறுதியாகக் கலை பற்றிய ஆய்வில் கொக்குளாயிலுள்ள, அண்ணாவியார் சின்னையா துரைச்சாமியைச் சந்திக்க நேர்ந்தது. “கூத்துக்குக் கொப்பி போடக் கூடப் பெடியள் வாறாங்கள் இல்லை” என்று அவர் கவலைப்பட்டுக் கொண்டார். 1960-களில் இரத்தக் கண்ணீர், நாம், நீதிபதி போன்ற சினிமாப் பிரதிகள்தான் இவரால் மேடை ஏற்றப்பட்டவையாகும். இத்தகைய திரைப்படங்களைத் தற்போதுள்ள தொலைக்காட்சி ஊரில் வழங்கிக் கொண்டிருப்பதால், சினிமா நாடகங்களை இவரால் மேடை ஏற்ற இயலாமல் இருப்பது தெரிய வருகிறது என்பதை, இதுபற்றி உரையாடியபோது பேராசிரியர் ஒருவர் கொழும்பில் கூறினார். ஆனால், தென்மோடி, வடமோடி போன்ற நாட்டுக் கூத்துக்கு இன்னும் வரவேற்புள் ளமை தெரிகிறது. அவற்றை, இவ்வூரில் பழக்கிய புண்ணியமூர்த்தி போன்ற அண்ணாவிமார் காலஞ்சென்று விட்டார். நாட்டுக் கூத்துக்கள், மற்றும் தரமான எழுத்துப் பனுவல் கொண்ட சமூக நாடகங்களை யாராவது பழக்கி மேடை ஏற்றுவார்களேயானால், நாடகக்கலை வளர்வதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. இம் முயற்சிகள், தற்போதையச் சமுதாயச் சூழலில் பாடசாலைக்களுக்கூடாக மெல்ல மெல்ல வளர்த்து எடுக்கப்படல் வேண்டும் என்பதையும் உணரக் கூடியதாக இருந்தது.

தொடரும்...

# A New Medical & Professional Building ON MARKHAM ROAD - TORONTO

## ROYAL MEDICAL AND PROFESSIONAL CENTRE




**LIMITED UNITS AVAILABLE FOR SALE / LEASE**

For More info. Call:

**Raja Mahendran**** 416.315.9397

**Gulshan Sharma**** 416.407.5911

## HomeLife / GTA Realty Inc. Brokerage*

416.321.6969

HOMELIFE HIGHER STANDARDS

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated ** Broker

# MORTGAGE SOLUTIONS

SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING

$2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credit Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 1.9% | | $1,405.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

Prime + 1% Lower Rate

$50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5




















# யூரோ கால்பந்து - உலக ரசிகர்களை கவர்ந்த தொடரின் வரலாறு!

உலகில் அதிகம் பேரால் பார்க்கப்படும் விளையாட்டுகளில் 2ஆவது இடம் எப்போதும் யூரோ கால்பந்து தொடருக்கு தான். 1960ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் இந்தத் தொடரின் வரலாற்று பின்னணியை தற்போது பார்க்கலாம். ஐரோப்பிய ஒன்றியங் களில் உள்ள நாடுகளை ஒருங்கிணைத்து ஒரு கால்பந்து தொடரை நடத்த வேண்டும் என்று விரும்பினார் 1927இல் பிரெஞ்சு கால்பந்து கூட்டமைப்பின் பொதுச் செயலாள ராக இருந்த ஹென்ரி டிலாவ்னி (Henri Delaunay). அவரது ஆசை 1958இல்தான் நிறைவேறியது ஆனால் அதற்குள் அவர் காலமாகிவிட்டார். அதனால் அவரது பெயரிலேயே கோப்பையை வழங்க முடிவு செய்யப்பட்டது. முதல் ஐரோப்பிய கால்பந்து தொடர் 1960ஆம் ஆண்டு நடைபெற்றது.

மிகுந்த எதிர்பார்ப்புக்கு இடையே பிரான்சில் நடைபெற்ற இப்போட்டியில் 17 நாடுகளின் அணிகள் பங்கேற்றன. இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி, நெதர்லாந்து மற்றும் இத்தாலி போன்ற முக்கிய நாடுகள் இப் போட்டியில் பங்கேற்கவில்லை. சோவியத்யூனியன் உடனான போர் காரணமாக கால் இறுதிப் போட்டியில் இருந்து ஸ்பெயின் அணி வெளி யேறியது. இறுதிப்போட்டியில் யுகோஸ்லாவி யாவை வீழ்த்திய சோவியத்யூனியன் சாம்பியன் பட்டத்தைத் தட்டி சென்றது.

1964ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக யூரோ கோப்பை கால்பந்து தொடர் நடை பெற்றது. ஸ்பெயின் நாட்டில் நடைபெற்ற இந்த தொடரில் 29 அணிகள் பங்கேற்றன. இந்த முறையும் மேற்கு ஜெர்மனி இந்தத் தொடரை புறக்கணித்தது. முதல் தொடரில் போர் காரணமாக சோவியத் யூனியனுக்கு எதிரான போட்டியில் இருந்து விலகிய ஸ்பெயின் அணி இந்த முறை இறுதிப் போட்டியில் அதே அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.

1972இல் நடந்த யூரோ தொடரில்தான் முதன்முறையாக மேற்கு ஜெர்மனி அணி பங்கேற்றது. முதல் தொடரிலேயே வலுவான சோவியத் யூனியனை இறுதிப் போட்டியில் எதிர்கொண்டு மேற்கு ஜெர்மன் அணி வெற்றியும் கண்டது.



1976ஆம் ஆண்டுதான் யூரோ கோப்பையில் முதன்முதலாக பெனால்டி ஷூட் அவுட் முறை பயன்படுத்தப்பட்டது. இது ஆட்டத்தின் போக்கில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் இந்த ஆண்டின் இறுதி போட்டியில் கோப்பை யாருக்கு என்பதை முடிவு செய்ததே பெனால்டி ஷூட் தான். மகுடத்திற்கான போட்டியில் மேற்கு ஜெர்மனியை எதிர் கொண்ட செகோஸ்லோவியா அணி 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

1980இல் மேற்கு ஜெர்மனியும் 1984இல் பிரான்சும் 1988இல் நெதர்லாந்தும் கோப்பை யை வசப்படுத்தின. 1992ஆம் ஆண்டு நடை பெற்ற போட்டியில்தான் முதல் முறையாக வீரர்களின் ஜெர்சியில் பெயர்கள் இடம் பெற்றன. மேற்கு ஜெர்மனியாக அதுவரை களமிறங்கி வந்த அணி ஒருங்கிணைந்த ஜெர்மனி ஆனதும் இத்தொடரில்தான்.

யூரோ கோப்பை கால்பந்து தொடரை 2000ஆம் ஆண்டு முதல்முறையாக இரண்டு நாடுகள் ஒன்றிணைந்து நடத்தின. கால்பந்து உலக கோப்பையை வென்ற உற்சாகத்துடன் களமிறங்கிய பிரான்ஸ் அணி, அந்த ஆண்டு யூரோ கோப்பையையும் கைப்பற்றி அசத்தியது. 2004ஆம் ஆண்டு நடைபெற்ற தொடரில் கிரீஸ் அணி வாகை சூடியது.

2008ஆம் ஆண்டில் யூரோ கோப்பை புதிதாகவும், முந்தையதைவிடப் பெரியதாக வும் வடிவமைக்கப்பட்டது. 1964-க்குப் பிறகு ஸ்பெய்ன் அணி இந்த தொடரில் கோப்பையை முத்தமிட்டது. 2012ஆம் ஆண்டும் கோப்பையை ஸ்பெய்ன் அணியே வென்றது. இதன்மூலம் அதிக முறை யூரோ கோப்பையை வென்ற அணி என்ற சாதனையை ஜெர்மனியுடன் பகிர்ந்து கொண்டதுடன், தொடர்ச்சியாக இரு முறை யூரோ கோப்பையை வென்ற அணி என்ற புதிய சாதனையும் படைத்தது ஸ்பெய்ன்.

2016ஆம் ஆண்டு போட்டி வரலாற்றில் மிகவும் முக்கியமானது. அதுவரை எந்த ஒரு முக்கியமான கோப்பையும் வெல்லாத போர்ச்சுகல் அணி முதன் முறையாக யூரோ கோப்பையை முத்தமிட்டது. தொடரின் இறுதிப்போட்டியில் 25 நிமிடத்தில் நட்சத்திர வீரர் கிறிஸ்டி யானோ ரொனால்டோ காயம் காரணமாக வெளியேறினார். ஆனாலும் ஆட்டத்தின் 109ஆவது நிமிடத்தில் Eder அடித்த கோலால் 1-0 என பிரான்சை போர்ச்சுக்கல் வீழ்த்தியது.

*******

யூரோ கால்பந்து இறுதி 16 அணிகள் நொக் அவுட் சுற்றில் சுவிட்சர்லாந்து அணியிடம் உலக சாம்பியன்களான பிரான்ஸ் அணி அதிர்ச்சித் தோல்வி அடைந்து வெளியேறியது. பெனால்டி ஷூட் அவுட்டில் சுவிட்சர்லாந்து 5-4 என்று வெற்றி பெற்றது. யூரோ கோப்பையைக் கைப்பற்றும் அணி என்று பிரான்ஸ் அணியை சொல்லப்பட்டது. அதற்கேற்றவாறு ரியல் ரைம் ஆட்டத்தில் 3 கோல்களை அடித்தது, ஆனால் சுவிட்சர்லாந்து சவாலை சமாளித்து 3 கோல்களை அடிக்க ஆட்டம் 3-3 என்று சமன் ஆனது. ஆட்டம் கூடுதல் நேரத்துக்குச் சென்றது. அதிலும் வெற்றி தோல்வி தெரியாமல் போக ஆட்டம் பெனால்டி ஷூட் அவுட் முறைக்குச் சென்றது. இதில் சுவிட்சர்லாந்து 5-4 என்ற கோல் கணக்கில் வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றது. பெனால்டி ஷூட் அவுட்டுக்குச் சென்றாலே ஆட்டம் எந்தப் பக்கம் வேண்டுமானாலும் போகலாம். இதில் பிரான்சின் மின்னல் வீரர் சூப்பர் ஸ்டார் கைலியன் மபாப்பேயின் பெனால்டி ஷாட்டை சுவிட்சர்லாந்து கோல் கீப்பர் சரியாகக் கணித்தார், வலது புறம் டைவ் அடித்து தட்டி விட்டார். இது பிரான்ஸின் யூரோ கனவைத் தகர்த்தது. காலிறுதியில் ஸ்பெயின் அணியைச் சந்திக்கிறது சுவிட்சலாந்து.

Friday July 02, 2021 - Quarter-final 1: Switzerland vs Spain; Kick-off 3pm(St Petersburg) Quarter-final 2: Belgium vs Italy; Kick-off 9pm (Munich)
Saturday July 03, 2021 - Quarter-final 3: Czech Republic vs Denmark; Kick-off 3pm (Baku)
Quarter-final 4: Sweden or Ukraine vs England or Germany; Kick-off 9pm (Rome)
Semi-finals schedule: Kick-off times and venues
Tuesday July 06 , 2021 - Semi-final 1: Belgium or Italy vs Switzerland or Spain; Kick-off 9pm (Wembley, London)
Wednesday July 07, 2021 - Semi-final 2: Sweden/Ukraine/England/Germany vs Czech Republic or Denmark; Kick-off 9pm (Wembley, London)
Euro 2020 final: Kick-off Sunday July 11, 2021 ( Wembley, London)